Registered as a NewsPaper

விலை ரூபா-7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -15 | திருவள்ளுவர் ஆண்டு- 2035 | கார்த்திகை - 16 | 01-12-2004 | புதன்கிழமை | ஓசை -287




# படு பயங்கரமான அழுத்தத்திற்குள்

# யுத்தநிறுத்த உடன்பாடு சிக்கியுள்ளது!

## கண்காணிப்புக்குழுத் தலைவர் அபாய எச்சரிக்கை



**சிறிலங்கா அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட யுத்த நிறுத்த உடன்படிக்கை படுபயங்கரமான அழுத்தத்திற்குள்ளாகியிருப்பதாக யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் மேஜர் ஜெனரல்டொன்புறூவ் ஹொவ்டே அப்பாய அறிவிப் பொன்றை நேற்று விடுத்துள்ளார்.**

வடக்குக் கிழக்கில் தொடர்ச்சியாகப் பெருகிவரும் வன்முறைச் சம்பவங்களால் யுத்த நிறுத்த உடன்படிக்கைக்கு பேராபத்து ஏற்பட்டிருப்பதாக எச்சரித்து அவர் கருத்துத் தெரிவிக்கையில், சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டியது தற்போது மிகமிக அவசரமான தேவையாகியுள்ளது என்று வலியுறுத்தியுள்ளார். "வடக்கிலும் கிழக்கிலும் கடந்த சில நாட்களாகஇடம்பெற்றுவரும் தொடர்ச்சியான வன்முறைச் சம்பவங்கள் யுத்த நிறுத்த உடன்படிக்கையின் உறுதித்தன்மையை மிகமோசமாகப் பாதித்திருக்கிறது. நாம் ஒரு யுத்த நிறுத்த உடன்படிக்கையை வைத்திருந்தாலும் கூட இங்கு யுத்தம் நடைபெற்றுக்கொண்டுதான் இருக்கிறது. இதனை நாம் யுத்த நிறுத்த உடன்படிக்கையை அழித்து விடும் ஒருவித யுத்தமாகவே பார்க்க வேண்டியுள்ளது" என்று

(12ஆம் பக்கம் பார்க்க)

## இன்று நள்ளிரவு வரையில் பலத்த காற்றுடன் கூடிய மழை

### -இல.வளிமண்டலத் திணைக்களம் தெரிவிப்பு

(அலுவலக செய்தியாளர்)

நேற்று நண்பகல் 12.00மணி தொடக்கம் இன்று நள்ளிரவு வரையான 36 மணி நேரத்திற்குள் வடக்கு, கிழக்கு, வடமத்திய மாகாணங்களில் பலத்த காற்றுடன் கூடிய பெருமழை பெய்யலாமென இலங்கை வளிமண்டலத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

குறிப்பாக திருகோணமலை, முல்லைத்தீவு, யாழப்பாணம், கிளிநொச்சி மன்னார், அனுராதபுரம், பொலநறுவை ஆகிய மாவட்டங்களில் மேற்படி பலத்த காற்றுடன் கூடிய பெருமழை பெய்யக்கூடுமென இலங்கை வளிமண்டலத் திணைக்களம் தொலைநகல் மூலம் அந்தந்த மாவட்ட அரச அதிபர்களுக்கு தெரியப்படுத்தியுள்ளது. எனவே மீன் பிடித்தொழிலில் ஈடுபடுபவர்கள் கடலிற்குச் செல்வதை இன்று நள்ளிரவு வரை தவிர்த்துக் கொள்ளும் வண்ணம் கிளி.

(12ஆம் பக்கம் பார்க்க)

## திருகோணமலையில் மீண்டும்ஊரடங்கு அமுல்!

### கடத்தப்பட்டவர் சடலமாக மீட்பு

### தொடர்ந்தும் இயல்பு நிலை பாதிப்பு

(திருகோணமலை)

திருகோணமலையில் நேற்றுப் பிற்பகல் ஐந்து மணியில் இருந்து இன்று காலை ஆறுமணிவரை ஊரடங்கு உத்தரவு மீண்டும் அமுறற்படுத்தப்பட்டிருந்தது.

நேற்று முன்தினம் பிறப்பிக்கப்பட்ட ஊரடங்குச் சட்டம் நேற்றுக்காலை ஆறு மணிக்கு நீக்கப்பட்டும் அங்கு சுமுக நிலை ஏற்படாததையடுத்தே நேற்று மாலை மீண்டும் ஊரடங்கு அமுல் படுத்தப்பட்டதாகப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

நேற்று ஊரடங்கு உத்தரவு நீக்கப்பட்ட போதிலும் வர்த்தக நிலையங்கள், பொதுச்சந்தைகள் என்பன மூடப்பட்டிருந்தன. அதேநேரம் வாகனப் போக்குவரவும் மிகவும் குறைவாகவே காணப்பட்டது. பாடசாலைகளும் நேற்றுக்காலை ஒன்பது மணியுடன் மூடப்பட்டன.

இது இவ்வாறிருக்க நேற்று முன்தினம் தீவைப்பிற்கு இலக்கான சிற்றூர்தியில் பயணம்செய்த உல்லாசப் பயணிகள், வழிகாட்டி சுமித் என்பவர் கடத்தப்பட்டதாகவும் அவரது உடல் நேற்று துவரங்காட்டுப் பகுதியில் பொலிசாரால்

(12ஆம் பக்கம் பார்க்க)

## திருமலை நிலவரம் தொடர்பாக கடற்படைத் தளத்தில் மாநாடு



திருகோணமலையில் ஏற்பட்டுள்ள கலவர நிலமை தொடர்பில் நேற்றுத் திருகோணமலை கடற்படைத்தளத்தில் மாநாடு ஒன்று நடைபெற்றது

இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சாந்த கொட்டேகொட மற்றும் படைகளின் தலைமை அதிகாரி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி ஆகியோரின் தலைமையில் இந்த மாநாடு நடைபெற்றது

மூவினமதகுருமாருடன் வடக்கு

(12ஆம் பக்கம் பார்க்க)

## பிரபாகரன் உரை குறித்த தனது செயற்பாட்டை அரசாங்கம் விரைவில் தெரிவிக்க வேண்டும்!

### - ஐ.தே.கட்சி கோரிக்கை

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் மாவீரர் தினத்தில் ஆற்றிய உரை தொடர்பில் அரசாங்கம் தமது வெளிப்பாட்டை தெரிவிக்க வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது. அரசாங்கம்சமாதானப் பேச்சுக்களை உடனடியாக ஆரம்பிக்கவேண்டும் என்ற விடயத்தில் ஐக்கிய தேசியக் கட்சி தெளிவாகவே உள்ளது எனவே பிரபாகரனின் உரை தொடர்பாக அரசாங்கமே பதில் கூற வேண்டுமென ஐக்கிய தேசியக கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜி எல் பீரிஸ் தெரிவித்துள்ளார்

ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கமாகச் செயற்பட்டபோது இவ்வாறான விடயங்களில் எதிர்க்கட்சிமீது பாரத்தைச்சுமத்த வில்லை என்றும் அவர் குறிப் பிட்டுள்ளார் நேற்றுக் கொழும்பில் நடத்தப்பட்ட ஊடக மாநாட்டில் உரையாற்றிய அவர், சமாதான முயற்சிகளுக்கு நிறைவேற்று அதி காரம் கொண்ட சனாதிபதி முறை

(12ஆம் பக்கம் பார்க்க)

## -வடகிழக்கு அசம்பாவிதங்களுக்கு எதிராக-

## வவுனியாவில் நாளை ஹர்த்தாலுக்கு ஏற்பாடு

வவுனியாவில் நாளை பூரண ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது நேற்று வவுனியாவில் கூடிய தமிழ் மாணவர் ஒன்றியம் இந்த அழைப்பை விடுத்துள்ளது. மாவீரர் தின நிகழ்வுகளின் போது வடக்கு கிழக்கில் இடம் பெற்ற அசம்பாவிதங்கள் குறிப்பாக வேப்பங்குளம் பகுதியில் இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் குறித்து தமது கண்டனத்தை வெளிப்படுத்தும் முகமாகவே இந்தக் ஹர்த்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக தமிழ் மாணவர் ஒன்றியத் தலைவர் நேற்றைய ஊடகவியலாளர் மகாநாட்டில் தெரிவித்துள்ளார்.

(32)

## வீரச்சாவு

01.08.1997 அன்று றம்பைக் குளத்தில் நிலை கொண்டிருந்த சிறிலங்கா இராணுவத்தினர் மீதான தாக்குதலில் விழுப்புண் அடைந்து சிகிச்சை பெற்று வந்தபோது போராளி ஒருவர் 28.11.2004 அன்று வீரச்சாவடைந்துள்ளார்.

**கப்டன் -கடல்வேந்தன்**

(ஜெயசேனா-தீசன் கடற்கரை வீதி, மேற்கு ஊர்காவற்துறை, யாழ்) என்ற போராளியே வீரச்சாவடைந்தவராவார். இவருக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

## குருநகர்,திருநகர் குழுக்களிடையே மோதல்!

## வீடுகள் தீக்கிரை; பதற்றமான சூழ்நிலை

### - வன்முறைகளைத் தடுக்க கண்ணீர்ப்புகைவீச்சு; இரவுநேர ஊரடங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குருநகர் பகுதியில் இரு குழுக்களுக்கிடையே பெரும் கைகலப்பு ஒன்று ஏற்பட்டுள்ளதால் அப்பகுதியெங்கும் பெரும் பதற்றம் ஏற்பட்டுள்ளது. இதனையடுத்து நேற்று மாலை பொலிஸ் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு குருநகர், திருநகர் பகுதியைச் சேர்ந்த இருவேறு குழுக்களுக்கிடையே ஏற்பட்டமோதல் நேற்றுக் காலை அளவில் பெரும் கோஷ்டி மோதலாக வெடித்தது.

இம்மோதல்களில் ஈடுபட்ட குழுக்கள் வாள், கத்தி, வெற்றுக் கண்ணாடிப் போத்தல்கள், குண்டான் தடிகள் என்பவற்றைப் பயன்படுத்தி மோதிக்கொண்டதனால் நேற்று இரவு வரையில் 12 பேர் காயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டனர். அத்துடன் அப்பிரதேசத்தில் உள்ள 8 வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன.

இதனையடுத்து குருநகர்ப் பகுதிகள் எங்கும் பெருமளவு பொலிசார் மற்றும் இராணுவத்தினர் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டபோது மோதல் நிலை தணியவில்லை. பொலிஸ், இராணுவக்கட்டளைகளை மீறி குழுக்கள் தொடர்ந்தும் மோதலில் ஈடுபட்டுள்ளதால் பொலிசார் வீதித்தடைகளை ஏற் படுத்தி கண்ணீர் புகைக்குண்டுப் பிரயோகம், தடியடிப்பு என்பவற்றின் மூலம் அப்பகுதியில் கூடும் இளைஞர்களை விரட்டியடித்தனர்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

கிளி/வயர்லெஸ் A-9 வீதியில் சுமார் 150 மீற்றர் தூரத்தில், நல்ல சுற்றாடலும், அமைதியான சூழலும் குடியிருப்பதற்கும். சிறுகைத் தொழிற்சாலை நடாத்துவதற்கும் சிறந்த 3/4 ஏக்கர் காணி விற்பனைக்கு உண்டு.விலை 51/2 இலட் சம்தொடர்புகளுக்கு அ.இராசநாயகம் இல.100, விவேகானந்த நகர், கிளிநொச்சி. (5319)

## பாலம்திறப்பு

கண்டி-யாழ்ப்பாணம் (A-9) முதன்மைச்சாலையில் உமையாள்புரம் பகுதியில் அமைந்துள்ள இருபாலங்களில் ஒன்று நேற்று நிவாரணப்புனர்வாழ்வு நல்லிணக்க அமைச்சின் திட்டப் பணிப்பாளர் செல்வி. நல்லதம்பி அவர்களால் ஊர்திப் போக்குவரத்திற்காக முழுமையாக திறந்து வைக்கப்பட்டுள்ளது. மற்றப்பாலமும் வெகுவிரைவில் முழுமையாக பயன்படுத்துவதற்கு திறந்து விடப்படுமென அறிவிக்கப்பட்டிருக்கிறது.

# முல்லை மாவட்டத்திலுள்ள வாகனங்களைப் பதிவு செய்க!

முல்லை மாவட்டத்திற்குட்பட்ட சகல வாகனங்களையும் அந்தந்தப் பகுதி பிரதேச செயலகங்களிலும் பதிவினை மேற்கொள்ளுமாறு முல்லை மாவட்ட அரசஅதிபர் கேட்டுக்கொண்டார்.


வாகனங்களுக்கான எரிபொருட்கள் தருவிப்பதற்கான விபரம் அனுப்பவேண்டியுள்ளதால் சகல மோட்டார் ஊர்திகளும் இப் பதிவினை மேற்கொள்ளுமாறும் அரசஅதிபர் தெரிவித்தார். (20)

*-சிறிலங்கா இராணுவத்தால்*

# ஒதியமலையில் படுகொலை செய்யப்பட்ட 32 பொதுமக்களின் நினைவு நாள் நாளை

(ஒட்டுசுட்டான்)

ஒதியமலைக் கிராமத்தில் 1984.12.02 ஆம் திகதி அன்று சிறிலங்கா இராணுவத்தினால் படுகொலை செய்யப்பட்ட 32 பொதுமக்களின் நினைவு நாள் நிகழ்வுகள் நாளை 11.00 மணியளவில் ஒதியமலையில் அமைக்கப்பட்டுள்ள நினைவுத் தூபி அருகில் நடைபெறவுள்ளது. (05)



வவுனியா விண்மணி வெளியீட்டகத்தினால் பி.ரவிவர்மனின் ''நெடுங்காலத்தின் பின்னொரு நாள்'' சிறுகதைத் தொகுதி வெளியிடப்பட்டபோது நூலின் முதற்பிரதியை வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் தி.ஞானவேலிடமிருந்து அகில இலங்கை தமிழ்காங்கிரஸ்கட்சியின் வன்னி மாவட்ட தலைவர் கே.ஏ.செந்தில்நாதன் பெற்றுக்கொள்ளவதனைப்படத்தில் காணலாம்.

(படம்:- ஆறு-சுபாஸ்கரன்.)

# பலம் பெருந்திய அமைப்பை உருவாக்கத் தலைவருக்கு மக்களின் ஒத்துழைப்பு பக்கபலமாக இருந்தது

## -மணலாறு களமுனைத் தளபதி மகேந்தி

சிறிலங்கா இராணுவத்திற்கு சமபலம்பொருந்திய ஒரு அமைப்பை உருவாக்குவதற்குத் தமிழீழத் தேசியத் தலைவருக்கு தமிழீழ மக்கள் அனைவரதும் ஒத்துழைப்புத்தான் பக்கபலமாக இருந்தது என தேசியத் தலைவரின் பிறந்த நாளை முன்னிட்டு ஒட்டுசுட்டான் கமக்கார அமைப்புக்கள், முன்பள்ளி ஆசிரியர்கள் ஆகியோர் மணலாறு களமுனைக்குச் சென்ற வேளை களமுனைக் கட்டளைத் தளபதி இரா.மகேந்தி தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் இருந்து எங்களுடைய களமுனைப் போராளிகளைச் சந்திக்க எவ்வளவோ துரத்திலிருந்து தேசியத்தலைவரின் பிறந்த நாளை முன்னிட்டு இங்கு வந்தமைக்கு எங்கள் படையணி சார்பாகவும், விடுதலைப் புலிகள் சார்பாகவும் வரவேற்பதோடு நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்றைய நாள் ஒரு மகிழ்ச்சிகரமான நாள் சமாதானம் என்ற சூழல் இடைநடுவில் இருக்கும் இந்தவேளையில் தலைவரின் பிறந்த நாளை முன்னிட்டு நெடுங்கேணியில் 50 பானை வைத்து பொங்கித் தலைவரின் பிறந்த நாளைக் கொண்டாடியது மட்டுமல்ல ஒதியமலைக் கிராமத்திலும் காண்டீபன் என்ற முன்பள்ளி திறந்து வைக்கப்பட்டது. இவைகளையெல்லாம் பார்க்கும்போது மக்கள் தலைவர் மீதும் விடுதலைப்புலிகள் மீதும் வைத்துள்ள பற்று, பாசம் என்பனவற்றை நேரடியாக காணமுடிகின்றது.

விடுதலைப் போராட்டத்தில் எமது தேசியத் தலைவர் எவ்வளவோ இடர்கள், துன்பங்கள், சதி முயற்சிகளுக்கும் மத்தியில் ஒவ்வொரு விடயத்தினையும் தீர்க்க தரிசனமாக சிந்தித்து எங்களை நன்கு வழி நடாத்தி வருகின்றார். ஆகவே தேசியத் தலைவரின் பொன்விழா காணும் இந்த பிறந்த நாளில் ஈழத்தை மீட்க வேண்டும் என்று எல்லோரும் ஒத்துழைப்பாக இருக்கின்றீர்கள் எவ்வளவோ கஸ்ரத்தின், இடரின், நெருக்கடிக்குள் இருந்த காலப் பகுதியிலும் இந்த மண்தான் தலைவரைக் காப்பாற்றியது.

தலைவரை இந்தியஇராணுவம் கைதுசெய்ய முற்பட்டபோது இந்த மண்ணிலே தான் குறைந்த போராளிகளுடன் மறைமுக போராட்டத்தை முன்னெடுத்துச் சென்றார்.

ஒரு குறிப்பிட்டளவு போராளிகளை வைத்து ஒரு பெரிய அளவில் சமர்களை முறியடித்து இலங்கை இராணுவத்திற்கு சமபலம் பொருந்திய அமைப்பாவதற்கும், உலகமே வியக்குமளவுக்கும், போற்றுமளவுக்கும் வளர்ந்தமைக்கு உங்களைப் போன்று தமிழீழ அனைத்து மக்களின் ஒத்துழைப்பே தான் மிகப்பெரிய பலமாகவும் இருந்தது. தலைவரின் ஒவ்வொரு சிந்தனைக்கும் மக்களின் முழு ஒத்துழைப்பு கிடைக்கின்றது.

அந்த வகையில் தற்போது ஐம்பது தொடக்கம் அறுபது கிலோ மீற்றர்வரை பகுதி பகுதியாகப் பிரித்து காவல் கடமையில் ஈடுபட்டிருக்கிறார்கள் தற்போதும் கூட தேசியத்துணைப்படை என சேர்ந்து பயிற்சி எடுத்து காவல் கடமையிலும் ஈடுபட்டுள்ளார்கள். இதில் குறிப்பிடத்தக்க விடயம் என்னவென்றால் பெண் தேசியதுணைப் படைப் போராளிகள் தான் அதிகம் என்பதை உங்களுக்கு எடுத்துகூறுவதோடு இதே போன்று உங்கள் ஒத்துழைப்பை எமது போராட்டத்திற்கு அதிக உந்து சக்தியாக இருக்கின்றமையால் வெகுவிரைவில் தமிழர்களுக்கு விடிவு நிச்சயம் கிட்டும் எனநான் நினைக்கின்றேன் என்றார். (05)

# வருமுன் காப்பு நடவடிக்கையில் திலீபன் மருத்துவ சேவையினர்

'வருமுன்காப்போம்' என்ற அடிப்படையில் பாடசாலை மாணவர்களுக்கான விழிப்புணர்வு நடவடிக்கையும், தடுப்பு மருந்துகளும் அளம்பில் தியாகதீபம் திலீபன் மருத்துவசேவையினரால் நடைபெற்று வருகின்றது.

மழை காரணமாக தொற்று நோய்கள் பரவும் அபாயநிலை காணப்படுவதால் பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள் ஆசிரியர்களுக்கான விழிப்பூட்டல் நடைபெற்று வருகின்றன.

செம்மலை மகவித்தியாலயம், அளம்பில் றோ.க.வித்தியாலயம், குமுழமுனை மகாவித்தியாலயம், உடுப்புக்குளம் அ.த.க.பாடசாலை ஆகியவற்றிலேயே இவ் விழிப்பூட்டல் கருத்தரங்கும், தடுப்பு மருந்து வழங்கலும் நடைபெற்று வருவதாக அளம்பில் தியாதீபம் திலீபன் மருத்துவசேவை வைத்தியர் திருமதி செவ்வானம் தெரிவித்தார். (20)

# படையினரின் அ.உ.பா.வலயத்தால் ஹாட்லியின் அபிவிருத்தி பாதிப்பு

யாழ். வடமராட்சி பருத்தித்துறையில் உள்ள ஹாட்லிக் கல்லூரியின் அபிவிருத்தி மற்றும் இயல்பான நிர்வாகச் செயற்பாடுகள் என்பவற்றிற்கு இப் பாடசாலையின் சூழலில் அமைந்துள்ள இராணுவ அதியுயர் பாதுகாப்பு வலயநடைமுறை பாரிய முட்டுக்கட்டையாக இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பாடசாலைஇராணுவ அதியுயர்பாதுகாப்பு வலயத்துள் இருப்பதனால் இப்பாடசாலையின் அபிவிருத்திகளுக்கு உதவி செய்யும் பொருட்டு அங்கு செல்ல நலன் விரும்பிகளுக்கும், உப தொண்டர் அமைப்புக்களின் பிரதிநிதிகளுக்கும், படைத்தரப்பு தடைவிதித்துள்ளது. அத்துடன் இப்பாடசாலைக்குச் செல்வோர் முற்கூட்டியே படைத்தரப்பிடம் அறிவித்து அனுமதிபெற்ற பின்பே அங்குசெல்ல அனுமதிக்கப்படுவார் எனவும் அறிவித்துள்ள படையினர் அனுமதிபெற்று செல்லும் சிலரையும் தமது தடைமுகாமில் வைத்துத்திருப்பி அனுப்பி வருகின்றனர். இந்நிலைமை மேற்படிபாடசாலையின் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு பெரும் முட்டுக்கட்டையாகவே உள்ளது. எனத்தெரிவிக்கப்படுவதுடன் படையினரது இக்கெடுபிடிகள் நீக்கப்பட வேண்டும் எனவும் கோரப்பட்டுள்ளது. (33)


# பணிநிலை வேண்டுகை

**போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவிற்கு பின்வரும் பணிநிலைக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன**

01. பணிநிலை :- அலுவலக சிற்றூழியர்.
வயது :- 25 தொடக்கம் 45 வயதிற்குட்பட்டவர்கள்.
சம்பளம் :- நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.

02. பணிநிலை :- காவலாளி
வயது :- 35தொடக்கம் 50 வயதிற்குட்பட்டவர்கள்
சம்பளம் :- நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.

**மேற்படி பணிநிலைக்கு விண்ணப்பிக்க விரும்புபவர்கள் போக்குவரத்துக் கண்காணிப்புப்பிரிவு நடுவப்பணியகத்துடன் 07.12.2004 இற்கு முன் நேரில் தொடர்புகொள்ளவும்.**

பொறுப்பாளர்,
போக்குவரத்துக்கண்காணிப்புப்பிரிவு,
கிளிநொச்சி.

(சி.10647)

**கலைப்பீடம்**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**
**முதலாம் வருடப் பரீட்சை -2004**

கலைப்பீட முதலாம் ஆண்டு, இரண்டாம் ஆரையாண்டுப் பரீட்சை -2004. எதிர்வரும் 13.12.2004 ஆம் திகதி திங்கட் கிழமை முதல் நடைபெறவுள்ளது.

பரீட்சார்த்திகள் பரீட்சை நேர அட்டவணையை கலைப் பீடாதிபதி அலுவலக விளம்பரப்பலகையில் பார்வையிடலாம்.

துணைவேந்தர்,
யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்

(சி.10649)

# யாழ்ப்பாண மாநகரசபை

**யாழ்ப்பாணவர்த்தகர்களுக்கான அறிவுறுத்தல்**

**இத்தால் சகலருமறிக:-**

**01.** ஆஸ்பத்திரி வீதி, மின்சார நிலைய வீதி, கஸ்தூரியார் வீதி, காங்கேசன்துறை வீதி, ஸ்ரான்லி வீதி ஆகிய வீதிகளில் தங்கள் வர்த்தகக் கடைக் கதவுகளின் எல்லைக்கப்பால் மேலதிகமாக இட்டுள்ள தாழ்வாரங்களை உடனடியாக அகற்றுமாறு கேட்டுக் கொள்கிறேன். வீதிப்போக்குவரத்துக்கு பெரும் இடையூறாக உள்ள இவற்றை அகற்றுவதோடு, நடைபாதையை மறித்துள்ள உங்கள் பொருட்களைப் பார்வைக்கு வைப்பதையும் தடைசெய்கின்றேன். டிசம்பர் 31 ஆம் திகதிக்கு.முன் இவை நிறைவேற்றப்படா விட்டால், அவற்றை அகற்றுவதற்கான நடவடிக்கைகள் எம்மால் எடுக்கப்படும் என்பதை வர்த்தகர்களுக்கு அறியத் தருகின்றேன்.

**02. நடைபாதை வியாபாரிகளுக்கு:-**

யாழ்ப்பாண நகரத்தில் மேற்குறித்த வீதிகளில் நடைபாதை வியாபாரம் செய்வதும் இத்தால் தடைசெய்யப்படுகின்றது. இந்த அறிவித்தலை மீறி நடைபாதை வியாபாரத்தினைத் தொடர்ந்து நடத்தின், அவை மாநகர சபையால் அகற்றப்படும் நிலை உருவாகும் என்பதையும் அறியத் தருகிறேன்.

(சி.10648)

(கலாநிதி க.குணராசா)
மாநகரஆணையாளர்,யாழ்ப்பாணம் .

# ரஷ்ய ஆதரவு பிரதமரை பதவி நீக்கக்கோரி

# உக்ரைன் அதிபருக்கு எதிர்க்கட்சி கெடுவிதிப்பு

(கீவ்)

**ரஷ்ய ஆதரவு பிரதமர் விக்டர் ஜானுகோவிச்சை 24 மணிநேரத்திற்குள் பதவி நீக்கம் செய்ய வேண்டும் என்று உக்ரைன் அதிபர் லியோனித் குச்மாவுக்கு எதிர்க்கட்சியினர் கெடு விதித்துள்ளனர்.**

எதிர்க்கட்சித் தலைவர்களில் ஒருவரான யூலியா திமெ ஷெங்கோ உக்ரைன் தலைநகர் கீவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆயிரக்கணக்கான ஆர்ப்பாட்டக் காரர்கள் மத்தியில் பேசுகையில் இவ்வாறு கெடுவிதித்தார்.



கீவ் நகரின் மத்தியில் உள்ள சுதந்திர சதுக்கத்தில் கடந்த ஒரு வாரமாக எதிர்க்கட்சி ஆர்ப்பாட்டக் காரர்கள் முகாமிட்டுள்ளனர்.

ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு எதிராக இரவோடு இரவாக அரசு நடவடிக்கை எடுக்கலாம் என்று அச்சம் தெரிவித்த யூலியா மக்களைப் பாதுகாக்க முன்வருமாறு இராணுவத்திற்கு அழைப்பு விடுத்தார்.

கடந்தவாரம் இடம்பெற்ற அதிபர் தேர்தலில் பிரதமர் விக்டர் ஜானுகோவிச் வெற்றிபெற்றதாக தேர்தல் ஆணையகம் அறிவித்திருந்தது. ஆனால் இத்தேர்தலில் பெரும் மோசடி இடம்பெற்றதாக எதிர்க்கட்சியினர் குற்றம் சாட்டியுள்ளனர்.

இதேவேளை நேற்று உக்ரைன் பாராளுமன்றத்தில் விக்டர் ஜானுகோவிச்சிற்கெதிராகக் கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாப்பிரேரணை நேற்று நிறைவேற்றப்படவில்லை. இதுகுறித்து விவாதம் இருபகுதியினருக்கிடையில் முறுகல் நிலையை ஏற்படுத்தியதால் சபாநாயகர் சபையை இன்று வரை ஒத்திவைத்துள்ளார்.



ரஷ்யாவுக்கு வருகை தரும் திபெத் ஆன்மீகத் தலைவர் தலெய்லாமா.

# ஈராக்கில் அமெரிக்கப் படைகள் மீதான தாக்குதல் குறித்த ஒளிநாடா வெளியீடு

## -சதாம் ஹுசைனின் ஆதரவாளர்கள் வெளியிட்டனர்

(பாக்தாத்)

ஈராக்கில் அமெரிக்கப் படைகள் மீது சதாம் ஹுசைனின் ஆதரவாளர்கள் நிகழ்த்தும் அதிரடித் தாக்குதல் நடவடிக்கைகள் தொடர்பான ஒளிநாடா ஒன்று வெளியாகியுள்ளது.

இதில் அமெரிக்கப்படைகளின் வாகனங்களைத் தீவிரவாதிகள் வெடிவைத்துத் தகர்ப்பது சீறிப் பாயும் ஏவுகணைகளை வீசி எதிரியின் விமானங்களை வீழ்த்துவது போன்ற காட்சிகள் அந்த ஒளிநாடாவில் தத்துரூபமாகப் ப[illegible]வாகியுள்ளதாகக் கூறப்படுகின்றது.

மேலும் தேடுதல் வேட்டையில் ஈடுபடும் அமெரிக்க இராணுவ வாகனங்கள் தீவிரவாதிகள் வைக்கும் கண்ணிவெடியில் சிக்கி சின்னாபின்னமாகும் காட்சியும் அந்நிய நாட்டினரைத் துப்பாக்கி முனையில் கடத்திச் சென்று தீவிர வாதிகள் மிரட்டும் காட்சிகளும் அந்த ஒளிநாடாவில் காணப்பட்டுள்ளது.



தென் மத்திய ஈராக்கிலுள்ள அமெரிக்கக் கடற்படை முகாம் ஒன்றின் மீது தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் காயப்பட்ட சகவீரரை மீட்கும் பணியில் ஈடுபட்டுள்ள அமெரிக்க கடற்படையினர்.

# பாகிஸ்தான் அதிபர் முஷாரப் அமெ.நாடுகளில் சுற்றுப்பயணம்

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தான் அதிபர் முஷாரப் லத்தீன் அமெரிக்க நாடுகளில் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளார். அணுவாயுத ஏவுகணைச் சோதனை வெற்றிகரமாக நடந்தது. பற்றி முஷாரப்பிடம் தெரிவிக்கப்பட்டது. அவர் பாகிஸ்தான் விஞ்ஞானிகளைப் பாராட்டினார். இதேபோல் பாகிஸ்தான் பிரதமர் சவுகத் அஜீசும் விஞ்ஞானிகளைப் பாராட்டினார். கஜ்னாவி ஏவுகணை நேற்று முன்தினம் 3ஆவது முறையாக சோதித்து பார்க்கப்பட்டது.

கடந்த 6 வாரங்களுக்கு முன்பு 2-ஆவது சோதனை நடைபெற்றது. பாகிஸ்தான் இராணுவத்தில் ஏற்கனவே கஜ்னாவி ஏவுகணை சேர்க்கப் பட்டு விட்டது. பின்னர் ஏன் அதை சோதித்துப் பார்க்கிறீர்கள் என்று பலருக்கு ஆச்சரியம் ஏற்பட்டது. சமீபத்தில் இந்தியா ஆகாஷ் ஏவுகணையைச் சோதனை செய்து பார்த்ததைத் தொடர்ந்து பாகிஸ்தானும் அதன் கஜ்னாவி ஏவுகணையை சோதித்துப்பார்த்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.



பாக்தாத்தில் பெற்றோலைப் பதுக்கிவைத்திருந்த சில கறுப்புச் சந்தைக்காரர்கள் ஈராக்கிய படையினரால் கைதுசெய்யப்பட்டு தாக்கப்படுகின்றனர்

# எமது ஏவுகணைச் சோதனை இந்தியாவிற்கெதிரானதல்ல

## -பாக்.அதிகாரி இந்.அதிகாரியிடம் தெரிவிப்பு

(இஸ்லாமபாத்)

நேற்று முன்தினம் நடத்திய அணுவாயுத ஏவுகணைச் சோதனை பாகிஸ்தானின் அணுவாயுத வளர்ச்சித் திட்டத்தின் ஒரு பகுதியே தவிர இந்தியாவுக்கு எதிரானது அல்ல என்றும், புதுடில்லியில் உள்ள இந்திய அதிகாரிகளிடம் பாகிஸ்தான் அதிகாரி ஒருவர் கூறினார்.

ஹாட்ப் III கஜ்னாவி என்ற பெயருள்ள பாகிஸ்தான் ஏவுகணையில் மேற்கொண்டு புதிய சில முறைகள் பொருத்தப்பட்டு இருப்பதைச் சோதித்துப் பார்ப்பதற்காக அது சோதனைக்கு விடப்பட்டது என்றும், அதைச் சோதித்துப் பார்க்க வேண்டும் என்று எங்களுக்குத் தோன்றும் போதெல்லாம் அதைச் சோதித்து பார்ப்போம் என்றும், பாகிஸ்தான் அதிகாரி ஒருவர் கூறினார்.

290 கிலோ மீற்றர் தூரம் பறந்து சென்று குறிப்பிட்ட இலக்கைத் தாக்கும் சக்திகொண்ட இந்த அணுவாயுத ஏவுகணைச் சோதனை வெற்றிகரமாக இருந்ததாகப் பாகிஸ்தான் விஞ்ஞானிகள் கூறியிருந்தது தெரிந்ததே.



இந்திய கடல் பகுதியில் மீன் பிடித்துக் கொண்டிருந்த 43 இந்திய மீனவர்கள் திசைமாறி பாகிஸ்தான் கடற் பகுதிக்குள் சென்று விட்டனர். பாகிஸ்தான் கடற்படையினர் அந்த 43 மீனவர்களைக் கைது செய்தனர். அவர்களது படகுகளையும் கைப்பற்றிவிட்டனர். கைதான இந்திய மீனவர்களைக் கராச்சி நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்த பொலிசார் பேருந்தில் கொண்டு சென்ற காட்சி.

# மணிலாவிலிருந்து 50 கி.மீ.கிழக்கே மண்சரிவில் இருபத்தாறு பேர் பலி

(மணிலா)

பிலிப்பைன்சின் வடக்கிலும், மத்திய பகுதியிலும் அடைமழையினால் ஏற்பட்ட மண் சரிவினால் 26 பேராவது கொல்லப்பட்டிருக்கலாம் என அறிவிக்கப்படுகின்றது.

வெள்ளப் பெருக்கினால் மீட்புப் பணியாளர்கள் மண்சரிவு ஏற்பட்ட பிரதேசங்களுக்குச் செல்ல முடியாத நிலை காணப்படுவதால் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கையை திட்டவட்டமாகக் கூறமுடியாதுள்ளதாக மணிலா அதிகாரிகள் கூறுகின்றனர்.

இதேவேளை தலைநகர் மணிலாவிலிருந்து 50 கிலோ மீற்றர் கிழக்கே அமைந்துள்ள பிரதேசத்தில் பல தடவைகள் மண்சரிவு ஏற்பட்டுள்ளது. இதில் 14 பேர் கொல்லப்பட்டதாகவும் அவர்களில் அநேகமானோர் சிறுவர்கள் என்று வேறொரு செய்தி தெரிவிக்கின்றது.

# பயங்கரவாத தாக்குதல்களைக் குறைக்க மதரீதியான சகிப்புத்தன்மையை வளர்க்குக!

## -ஐ.ஒன்றியம் ஆலோசனை

பயங்கரவாத தாக்குதலின் அபாயத்தைக் குறைக்க வேண்டுமானால் ஐரோப்பிய நாடுகள் மதரீதியான சகிப்புத் தன்மையை வளர்த்துக் கொள்வது முக்கியம் என வலியுறுத்தப்பட்டுள்ளது. ஐரோப்பிய ஒன்றியத்தின் பயங்கரவாத தடுப்பு நடவடிக்கைகளுக்கான முக்கிய அதிகாரியே இவ்வாறு தெரிவித்துள்ளார். இஸ்லாமியத் தலைவர்களை, பெண்களை வருத்துபவர்களாக சித்தரித்து முத்திரை குத்திய நெதர்லாந்து திரைப்பட இயக்குனர் இந்த மாதம் படுகொலை செய்யப்பட்டிருந்தார். இந்தச் சம்பவம் தனது கருத்துக்கு உதாரணமாக அமைந்திருக்கின்றதென்றும் அவா மேலும் தெரிவித்துள்ளார்.

# வீதி ஒழுங்கு நடைமுறைகள் தொடர்பாக பொதுமக்களிடையே விசேட கருத்தூட்டல்

## –தமிழீழ காவல்துறை வீ.போ.பி. பொறுப்பாளர் தகவல்

(அலுவலக செய்தியாளர்)

**தமிழீழ காவல்துறையின் வாகனப்போக்குவரத்துப் பிரிவினரால் அரச, அரசசார்பற்ற நிறுவன ஊழியர்களுக்கான வீதி ஒழுங்கு விதிமுறைகள் குறித்து கருத்தரங்கு அந்தந்த நிறுவனங்களில் நடாத்தப் பெற்றுவருகின்றது.**

நேற்று முன்தினம் கிளிநொச்சி வடபிராந்திய பாரஊர்திகள் சங்க சமாச பணியாளர்கள், சாரதிகள் ஆகியோருக்கான மேற்படி வீதி ஒழுங்கு விதிமுறைக்கருத்தரங்கினை தமிழீழ காவல்துறை வீதிப் போக்குவரத்துப் பொறுப்பாளர் சி.சிவகுமாரன் வழங்கினார்.

இதில் பாதசாரிகள், துவிச்சக்கர வண்டி ஓட்டுனர்கள், சாரதிகள், வீதியில் கடைப்பிடிக்கும் விதிமுறைகள் தொடர்பாகவும், விபத்துக்கள் நடைபெறா வண்ணம் தடுப்பது தொடர்பாகவும் கருத்துரைகள் இடம் பெற்றது.தொடர்ந்தும் மேற்படி வீதி ஒழுங்கு விதிமுறைக் கருத்துரைகள் கிராமம் கிராமமாக பொதுமக்கள் மத்தியில் முன்னெடுக்கப்படவுள்ளதெனவும் இதன் மூலம் வீதி விபத்துக்கள் இடம் பெறுவதனைத் தடுப்பதற்கு தமிழீழ காவல்துறை வீதிப்போக்குவரத்துப் பிரிவு வழிசமைக்குமென பொறுப்பாளர் தெரிவித்துள்ளார். (சோ)



நீண்டகாலமாக புனரமைப்பற்ற நிலையிலிருந்த டி.7 பிரதான வீதியானது தற்போது பெய்த அடை மழைகாரணமாக முற்று முழுதாக போக்கு வரத்து செய்யமுடியாத நிலையில் சேதமடைந்துள்ளமையினை படத்தில் காணலாம். மேற்படி வீதியருகே கிளிநொச்சி இந்துக் கல்லூரி அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(படம்-சோதி)

# சிறார்களுக்கு உதவி வழங்கல்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி இந்து இளைஞர் பேரவையினர் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் தாய்சேய் சிகிச்சைநிலைய சிறார்களுக்குத் தேவையான சில பொருட்களை வழங்கியுள்ளனர்.

மாவட்ட வைத்திய அதிகாரி சிவானந்தம் தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வானது மாவட்ட வைத்தியசாலை சிறுவர்கள் விடுதியில் தங்கியிருந்த 50இற்கு மேற்பட்ட சிறார்களுக்குத் தாய் சேய் சிகிச்சை நிலையத்தில் வைத்துப் பால்மா, குழந்தை உணவு, குழந்தைகளுக்கான மருந்துகள் அடங்கிய பொதிகளை இந்து இளைஞர் பேரவையினர் வழங்கினர்.இந்நிகழ்வில் இந்து இளைஞர் பேரவைத்தலைவர் சி.நவரத்தினராசா, செயலாளர் நா.வேலாயுதம், பொருளாளர் செ. செலவரத்தினம் ஆகியோர் கலந்து கொண்டு மேற்படி பொருட்களை வழங்கியமை குறிப்பிடத்தக்கது. (கு)

# பிரான்ஸில் பேரெழுச்சியுடன் மாவீரர் நாள் ஆயிரக்கணக்கான மக்கள் பங்கேற்பு

பிரான்ஸில் தமிழீழ மாவீரர் நாள் 2004 நிகழ்வு பாரீஸின் புறநகர்ப பகுதியான மாசிப்பலசோ (Massy Palaiseau) எனுமிடத்தில் அமைந்த லூா குறந்தோம் (Le Grand Dome) அரங்கில் கடந்த ஞாயிற்றுக்கிழமை சிறப்பாக நடைபெற்றது.

நிகழ்வில் பொதுச்சுடரை பிரெஞ்சுப் பணியகப் பிரதிநிதி ரஞ்சன் ஏற்ற பிற்பகல் 2.05 மணிக்கு தேசியக்கொடி ஏற்றல் நிகழ்வுடன் ஆரம்பமானது. தமிழீழ தேசியக்கொடியை தமிழீழத்திலிருந்து வருகைதந்த கடற்புலிகளைச்சேர்ந்த விநாயகம் ஏற்றி வைத்தார். ஈகச் சுடரை தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரெஞ்சுக்கிளைப் பொறுப் பாளர் பரிதி ஏற்றி வைத்தார். அதனைத்தொடர்ந்து பெருந்திரளாக வந்த மக்கள் மாவீரர் நினைவாக அமைக்கப்பட்ட நினைவுத் தூபியில் மலர்கள் வைத்து மாவீரர்களுக்கு வணக்கம் செலுத்தினர்.

மாவீரர்நாள் நிகழ்விற்காக கடற்புலிகளின் கலம் போன்று பிரமாண்டமாக வடிவமைக்கப்பட்ட மேடையிலே கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. எழுச்சி கானங்கள், நாட்டுக்கூத்து, நாடகம் மற்றும் மாவீரர் நாள் - 2004 நிறைவுப் போட்டிகளில் பங்குபற்றி வெற்றி பெற்றவர்களுக்கான பதக்கங்கள், சான்றிதழ்கள் வழங்கி ஊக்குவிக்கப்பட்டது.

இறுதி நிகழ்வாக தாயகத்திலிருந்து வருகைதந்த கடற் புலிகளைச் சேர்ந்தவிநாயகம் சிறப்புரையாற்றினார். இம் மாவீரர் நாள்எழுச்சி நிகழ்வில் 7,000 இற்கும் மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டு மாவீரர் களுக்கு தமது இதயவணக்கங்களைச் செலுத்தினர். நிகழ்வுகள்யாவும் மிகவும் எழுச்சியாக இரவு 9.00 மணிக்கு நிறைவுபெற்றது.

# இலக்கத் தகடற்ற உந்துருளிகள் அக்கரைப்பற்றில் கைப்பற்றல்

(மட்டக்களப்பு )

அக்கரைப்பற்றில் இலக்கத் தகடின்றி இதுவரை பதியப்படாத பதினேழு உந்துருளிகளை அக்கரைப்பற்றுப் பொலிசார் கைப்பற்றி உள்ளனர்.மேற்படி உந்துருளிகள் அண்மைக்காலத்தில் அக்கரைப்பற்றுப் பிரதேசத்தில் இடம்பெற்ற கொலைகளுக்குப் பயன் படுத்தப்பட்டனவா என்பது குறித்து பொலிசார் தீவிர விசாரணையில் ஈடுபடுத்தப் பட்டுள்ளதாக அக்கரைப்பற்று சிறிலங்கா பொலிஸ் நிலைய அதிகாரி தெரிவித்துள்ளார்.

# தமிழ் ஊடகத்துறையை பலம்மிக்க அமைப்பாக கட்டியெழுப்ப தமிழ்த் தேசியத் தலைமை முன்வந்துள்ளது

எமது தேசிய விடுதலைப் போராட்டத்தை ஒடுக்கவும், எமது தேசிய அடையாளத்தை சிதைக்கவும் சிங்களப் பேரினவாதம் பல சூழ்ச்சிகளைக் கையாண்டது. புதிய புதிய கோணத்தில் ஊடகப்பயங்கர வாதத்தை கட்டவிழ்த்து விட்டனர். இன்று எமது தேசிய அடையாளத்தை நிலைநிறுத்த ஊடகத்துறையை பலம் மிக்க ஒரு அமைப்பாக கட்டியெழுப்ப எமது தமிழ்த்தேசிய தலைமை முன்வந்துள்ளமை எமது இந்தப்பணிகளில் திருப்பு முனையாக அமைகின்றது. இவ்வாறு பொன்.பூலோகசிங்கம் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் கடந்த 26.11.2004 அன்று தமிழ் ஊடக அறிவியல் கல்லூரிக்கான அடிக்கல் நாட்டு நிகழ்வு நடைபெற்றமை தெரிந்ததே. இதில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் மேலும் குறிப்பிடுகையில்;

கடந்த 50 வருடகாலத்திற்கு மேலாக நாமும் எங்கள் முன்னோர்களும் எமது தேசியத்தை அடையாளப்படுத்தவும், அதன் நடைமுறையில் நிலைநிற்கவும் நீண்டதோர் பயணத்தை மேற்கொண்டோம். அதற்காகப்பல போராட்டங்களை நடத்தினோம். எமது முன்னோர்களின் சாத்வீக ரீதியான செயற்பாடுகளுக்கெல்லாம் பேரினவாதிகள் இராணுவ் மொழியிலே பதில் கொடுத்தார்கள். தேசிய அடையாளத்தைத் தேட முயன்ற எங்கள் முன்னோர்களது செயற்பாடுகளுக்கு எதிராக பேரினவாதிகள் செயற்பட்டதோடு, இன அழிப்பு நடவடிக்கைகளையும் தீவிரப்படுத்தலாயினர். ஒருபக்கம் எமது முன்னோர்கள் கையாண்ட அணுகுமுறைகள் தோற்கடிக்கப்பட்டமை, மறுபக்கம் இன அழிப்பு நடவடிக்கைகளும் தீவிரப்படுத்தப்பட்டன. தாயக மண்ணில் நிலச்சூறையாடலையும் தொடர்ந்த வண்ணமேயிருந்தது.

எமது மண்ணில் எங்கள் தாயகபூமியில் தொடர்ச்சியாக இடம்பெற்று வந்த இன அழிப்புச் செயற்பாட்டின் உச்சக் கட்டத்தை நாம் எல்லோரும் 1983ஆம் ஆண்டு அனுபவித்தோம்.

இந்த இன அழிப்பு நடவடிக்கைகளையும் நிலச்சூறையாடலையும் தடுத்து நிறுத்தி எமது தேசிய அடையாளத்தை நிலை நிறுத்த எமது இளைய தலைமுறை போராட்ட வடிவத்தை மாற்றியமைத்தது.தெளிந்த சிந்தனையும் ,தூர நோக்கும் பரந்த ஆற்றலும் கொண்ட தமிழ்த் தேசியத் தலைமை உருவாக்கம் பெற்றது. இதனால் தமிழ்தேசிய விடுதலைப்போராட்டம் முனைப்படைந்து மை பெற்றது. எமது தமிழ்த் தேசிய தலைமை வகுத்த வியூகங் கள் தமிழ்த் தேசியத்தைக் காக்கும் எமது முன்னோக்கிய நகர்வில் புதிய பரிமாணத்தைத் தோற்றுவித்தது. எமது இந்த நீண்ட பயணத்தில் 18000இற்கு மேற்பட்ட மாவீரர்கள் தமது இன்னுயிரைத் தியாகம் செய்தார்கள். 70000இற்கு மேற்பட்ட பொதுமக்களைப் பேரினவாதம் காவு கொண்டது. பேரினவாதிகளின் எத்தகைய செயற்பாடுகளும் எமது நீண்ட பயணத்தை தடுத்து நிறுத்தவில்லை. மாறாக தமிழ்த் தேசியத்தை இலக்காக் கொண்ட எங்கள் பயணம் எமது நிலத்தில் எமது பலத்தில் உறுதியான தளத்தில் ஒரு புரட்சிகர தலைமைத்துவத்தின் வழிகாட்டலில் தீவிரமடைந்து வளர்ச்சி பெற்றது.


எமது தேசிய விடுதலைப் போராட்டத்தை ஒடுக்கவும், எமது தேசிய அடையாளத்தை சிதைக்கவும் பேரினவாதம் பல சூழ்ச்சிகளைக் கையாண்டு வந்தது. புதிய, புதிய கோணத்தில் ஊடகப் பயங்கரவாதத்தை கட்டவிழ்த்து விட்டனர். இன்று எமது தேசிய அடையாளத்தை நிலை நிறுத்த ஊடகத் துறையை பலம்மிக்க ஒரு அமைப்பாக கட்டியெழுப்ப எமது தமிழ்த் தேசிய தலைமை முன் வந்தமை எமது இந்தப் பணிகளில் ஒரு திருப்பு முனையாக அமைகின்றது. ஏனெனில் இன்று எமது தமிழ் ஊடகமும் அது சார்ந்த தமிழாக்க கருத்தியல்த் தளமும் பலவீனமாகவே காணப்படுகின்றது கசப்பான உண்மையாகும். இன்று உள்ளூர்ச்சக்திகளும், வெளிச்சக்திகளும் தத்தமது நோக்கத்தை நிறைவு செய்து கொள்வதற்காக எம்மை பலவீனப் படுத்தும் ஒரு சமாதானத்தை எம்மை பூலவீனப்படுத்தும் ஒரு சனநாயகத்தை எம் மீது திணிக்க முயற்சிப்பதை நாம் எல்லோரும் உணர்கின்றோம். இதை தாம் அனுமதிக்க முடியாது. அனுமதிக்கவும் கூடாது.


எமது பண்பாடும், பாரம்பரியமும் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டும். எமது இலக்கை நாம் அடையவேண்டும். எமக்குரிய சனநாயக விழுமியங்களை நாம்வகுத்துக் கொள்வதற்கு அதனைப் பேணிப் பாதுகாப்பதற்கு இன்று உருவாகும் இந்த தமிழ் ஊடக அறிவியல் கல்லூரி வழி அமைக்க வேண்டும்.

இன்று நிறுவன மயப்படுத்தப்பட்ட தமிழ் ஊடக கல்வி எங்குமே இல்லை. சிலர் பத்திரிகையாளர் பயிற்சி நெறி என்று மிகக் குறுகிய கால பயிற்சிகளை அவ்வப்போது வழங்கி வருகின்றார்கள். இவை அவர்கள் தமது தேவைக்காக தமது கருத்து நிலை நோக்கில் இருந்தே விளங்கி வருகின்றமை வேதனைக்குரியது மட்டுமல்ல விஷமத்தனமானதும் கூட.

இன்று சிங்கள தேசிய வாதம் குறைந்தளவிலான அந்நிய ஆதிக்கத்தின் தாக்கத்தினை எதிர் நோக்குகின்றது. அதில் தமிழ்த் தேசிய வாதம் மிகக் கூடுதலான அந்நிய ஆதிக்க நெருக்கடிகளை சந்திக்க வேண்டியுள்ளது. இதில் தரை மார்க்கமாக எம்மை தேடி வரும் அச்சக ஊடகங்கள், ஆகாய மார்க்கமாக எமது இல்லங்களுக்குள் நுழையும் இலத்திரனியல் ஊடகமே பெரும் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. ஒரு புறம் பேரினவாதம் எமது தேசிய அடையாளத்தைச் சிதைக்க முனைந்து நிற்கும் வேளையில் அந்நிய சக்திகள் தமது பலமான ஊடகத்துறையை விசாலப்படுத்தி எமது தேசிய அடையாளத்தின் தனித்துவத்தை உருக்குலைத்து கலப்பு கலாசார பண்பாடுகளை புகுத்தி விடப்பார்க்கின்றார்கள் அயல் நாட்டின் இந்த ஆதிக்க விஸ்தரிப்பு இன்று மதவழிபாடு, பொருளாதாரம் திரைப்படம் என எங்கள் வாழ்வியலின் எல்லாத் தளங்களையும் ஆக்கிரமித்துக் கொண்டுள்ளது. இப் பெரும் குறைபாட்டை நீக்க இந்த தமிழ் ஊடக அறிவியல் கல்லூரி எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டும் மலையகத் தமிழ் மக்களுடைய தனித்துவம் இஸ்லாமிய சகோதரர்களது விழுமியங்கள் என்பனவற்றையும் பேணிப் பாதுகாக்கும். தமிழ் பேசும் மக்களது ஊடகம் ஒன்றைத் தோற்றுவிக்கும் வகையில் இங்கே பயிற்சிகள் வழங்கப்படும். நவீன விஞ்ஞான தொழில் நுட்ப வளர்ச்சிகளை பூரணமாக உள் வாங்கிக் கொண்டதாக இலத்திரனியல் ஊடகக்கல்வி, அச்சக ஊடகக்கல்வி கலை ஊடகக்கல்வி என்பனவற்றையும் வழங்க பல ஆற்றல் மிக்க பெரியோர்கள் முன்வந்திருப்பது மகிழ்ச்சிக்குரியதாகும். எமது தமிழ் தேசியத்தை நிலைநிறுத்தும் எமது முயற்சியில் இந்த தமிழ் ஊடகக் கல்லூரி புதியதோர் மார்க்கத்திற்கான திறவுகோலாக அமையும் என்பது எமது அசைக்க முடியாத நம்பிக்கையாகும். நாமும் நமக்கென்றோர் நலியாக் கலையுடையோர் என்றார் நமது நாட்டுக் கவிஞன் மகாகவி நாமும் நமது சிதைவுறாத தமிழ் தேசிய அடையாளத்தை நிலை நிறுத்தவும், அதைப் பேணிப்பாது காக்கவும் எமது தமிழ்த் தேசியத் தலமையின் முன்னோக்கிய அணியில் நாமும் பாதம் பதித்து நிற்போமாக தமிழ் பேசும் இளையோர் சமுதாயம் கனவு மெய்ப்பட வேண்டும். அவர்கள் அடைய விரும்பும் இலக்கு கைப்படவேண்டும்.

## கனடாவில் நடைபெற்ற மாவீரர் தின நிகழ்வின்போது...





# சட்டவிரோதமாக பனை தறிக்கப்படுவதை யாழ்.பொலிசார் கவனிக்காதுள்ளனர்

### பனை தென்னை வள அபி.கூ.ச. கொத்தணி குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

**யாழ். குடாநாட்டில் சட்ட விரோதமான முறையில் பனை மரங்களை தறித்தழிக்கும் நடவடிக்கைகள் தொடர்ந்தும் இடம் பெற்று வருகின்ற போதும் இது குறித்து சிறிலங்காப்பொலிசார் கவனம் செலுத்துவதில்லை என பனைவள அபிவிருத்தி சார் அமைப்புக்கள் குற்றஞ்சாட்டியுள்ளன.**

யாழ். குடாநாட்டில் இராணுவ பாதுகாப்பு வலயக் கெடுபிடிகள், மற்றும் இராணுவ நெருக்கு வாரங்கள் காரணமாக பொதுமக்கள் மீளக்குடியமரச் சென்றிராத பிரதேசங்களில் இத்தகைய சட்ட விரோத பனை மரத்தறிப்பு நடவடிக்கைகள் இடம் பெற்று வருவதாகவும் இதனால் யாழ்.குடாநாட்டைச் சேர்ந்த சுமார் 10 ஆயிரத்திற்கும் (10000) மேற்பட்ட தொழிலாளர்கள் பாதிக்கப் பட்டிருப்பதாகவும் பனை,தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங் கங்களின் கொத்தணி சுட்டிக்காட்டியுள்ள நிலையிலும் சட்டவிரோத பனைமரத்தறிப்பு நடவடிக்கைகள் தொடர்வதையடுத்தே இவ்வாறான குற்றச்சாட்டு விடுக்கப்பட்டுள்ளது. (33)

## பனைவள அபிவிருத்தி குறித்து யாழ்.இல் ஆலோசனை

யாழ்.குடா நாட்டில் பனைவள அபிவிருத்திச்செயற்பாடுகளின் அடுத்த ஆண்டிற்கான (2005) திட்டங்கள் குறித்து தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும், பனைதென்னை வள அபிவிருத்திச் சங்கங் களின் கொத்தணியும் இணைந்து ஆலோசனைகளை மேற்கொண்டு வருகின்றன.பனை வளத்தை மூலதனமாககொண்ட உற்பத்தி நடவடிக்கை களை மேம்படுத்தல், பனைவள அழிப்பு நடவடிக்கைகளை கட்டுப்படுத்துதல், பனை மர மீள் நடுகைதிட்டம் என்பன குறித்தே இவ் ஆலோசனைகளில் அதிகம் கவனம் செலுத்தப்படுவதாக பனை தென்னைவள கூட்டுறவுச் சங் கங்களின் கொத்தணியின் தலைவர் மெய்யழகன் தெரிவித்துள்ளார்.(33)

## எயிட்ஸ் நோய் பற்றி யாழ்.இல் விழிப்புணர்வு நடவடிக்கை

யாழ். குடாநாட்டில் எயிட்ஸ் நோய் பற்றிய விழிப்புணர்வு நடவடிக்கைகளை அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தினர் மேற்கொண்டு வருகின்றனர். ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் (UNICEF) அனுசரணையுடனான இத் திட்டத்தில் பாடசாலை மட்டத்திலான எயிட்ஸ் விழிப்புணர்வு பற்றிய கருத்தரங்குகள் நடத்தப்பட்டு வருகின்றன. அத்துடன் கிராமமட்ட தொண்டர்களினால் எயிட்ஸ் விழிப் புணர்வு பிரச்சாரங்களும் நடத்தப்பட்டு வருகின்றன. (33)

## உப அதிபரின் பணத்தைத் தொலைத்த மாணவன் பரீட்சை எடுக்க அனுமதி மறுப்பு

### மாணவனின் தந்தை புகார்

(வடமராட்சி)

உப அதிபர் முறுக்கு வாங்கக் கொடுத்தனுப்பிய பணத்தைத் தொலைத்த மாணவன் மாகாணப் பரீட்சை எழுத அனுமதிக் கப்படவில்லையென தெரியவருகிறது.

கரவெட்டிப் பகுதி முன்னணிப் பாடசாலை ஒன்றில் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.தொலைத்த பணத்தைத் தந்தாலே பரீட்சை எழுத அனுமதிக்கப்படும் எனக் கூறியே மாணவன் பரீட்சை எழுத உப அதிபரால் அனுமதி மறுக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவது யாதெனின் இக் கல்லூரியின் சிற்றுண்டிச்சாலையை நிர்வகித்து வரும் இவ் உப அதிபர் குறித்த மாணவனை நெல்லியடிச் சந்தியில் உள்ள வர்த்தக நிலையமொன்றில் முறுக்கு வாங்கி வருமாறு பணித்து ஆயிரம் ரூபாய் பணத்தை மாணவனிடம் கொடுத்து பாடசாலை நேரம் வெளியே அனுப்பிய சமயம் இம் மாணவனால் ஆயிரம் ரூபாய் பணம் எங்கோ தவறவிடப்பட்டுள்ளது. இச் சம்பவம் சென்ற வாரம் புதன்கிழமை இடம்பெற்றுள்ளது. இச் சம்பவம் தொடர்பாக பெற்றோருக்கு அறியப் படுத்தாமலேயே 2004-11-29 அன்று இம் மாணவனை பரீட்சை எடுக்கஉப அதிபர் அனுமதி மறுத்துள்ளார்.

தவறவிடப்பட்ட ஆயிரம் ரூபா பணம் திருப்பிக்கொடுக்கப் பட்டாலே பரீட்சைக்கு அனுமதி அளிக்கப்படும் எனக் கூறி இம் மாணவர் பரீட்சை எழுத விடாது திருப்பி அனுப்பப்பட்டுள்ளார். இம்மாணவன் இப் பாடசாலையின் பரீட்சைகளில் அதி கூடிய புள்ளிகளைப் பெற்று முதன்னிலை வகிக்கும் மாணவன் என கூறப்படுகிறது.

## சிறுவர் பா. நிதியம், அ.பு. நிறுவனம் மிதிவெடி விழிப்புணர்வு நடவடிக்கையில்

(யாழ்பபாணம்)

யாழ்.புன்னாலைக்கட்டுவன், ஏழாலை,வளலாய், தெல்லிப்பழை, மாதகல், ஊர்காவற்றுறை, புங்குடுதீவு போன்ற இடங்களில் உள்ள இராணுவ அதிஉயர் பாதுகாப்பு வலயங்களை அண்மித்துள்ள பகுதி களில் மீளக்குடியமர்ந்துள்ளோர்களிடையே மிதிவெடி அபாயம் குறித்த விழப்புணர்வுகளை ஏற்படுத்தும் நடவடிக்கையில் ஐக்கிய நாடுகள் சிறுவர்பாதுகாப்பு நிதியம், அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் என்பன இணைந்து நடவடிக்கை மேற்கொண்டுள்ளன.

அத்துடன் மேற்படி பிரதேசங்களில் ஏற்கனவே மிதிவெடி விபத்தினால் பாதிக்கப்பட்டு அவயவங்களை இழந்தோருக்கு இந்நிறுவனங்களால் உதவி களும் வழங்கப்படுகின்றன. (33)

## நலன்புரிநிலைய மாணவர்களின் கல்வியை மேம்படுத்த நடவடிக்கை - த.மாணவர் அமைப்பு ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் உள்ள இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களில் வாழ்ந்து வரும் வறிய மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை மேம்படுத்த தமிழீழ மாணவர் அமைப்பு நடவடிக்கை எடுத்துள்ளது. இதனடிப்படையில் இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களில் வாழ்ந்து வரும் மாணவர்களின் இரவு நேரக் கற்றல் செயற்பாடுகளை ஊக்கு விக்கும் முகமாக தமிழீழ மாணவர் அமைப்பினர் நலன்புரி நிலையங் களில் வாழும் மாணவர்களுக்கு "பெற்றோல்மக்ஸ்களை வழங்கி வரு கின்றனர். இதன் மூலம் வறிய மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் மேம்பாடடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (33)

### நீதியரசர் அம்பேபிட்டிய படுகொலை

# அடையாள அணி வகுப்பில் 4பேர் அடையாளம் காட்டப்பட்டனர்

(கொழும்பு)

கொழும்பு மேல் நீதிமன்ற நீதி பதி சரத் அம்பேபிட்டிய கொலை வழக்கில் நேரடியாக சம்பந்தப்பட்ட நால்வர் நேற்று முன்தினம் கொழும்பு பிரதான நீதிமன்றத்தில் வைத்து அடையாளம் காணப்பட் டனர். குறிப்பிட்ட நால்வரும் கொலைக்காக அமர்த்திய வாகனத் தின் சாரதி மற்றும் கொலைஞர்கள் சம்பவத்திற்கு முன்னர் உணவு உட்கொண்ட உணவகத்தின் ஊழி யர் ஆகியோர் இவர்களை அடை யாளம் காட்டினர்.

இதனையடுத்து இவர்களை எதிர்வரும் 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்ட நீதவான் குசலா சரோஜினி வீரரட்ன அதற்கு முன்னர் இந்தக் கொலைக்கு திட்ட மிட்டதாக கூறப்படும் பாதாள உலக குழுத்தலைவர் ஒருவரை எதிர்வரும் 3ஆம் திகதி மன்றில் ஆஜர்படுத்துமாறு உத்தரவிட்டார். இதற்கிடையில்சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட இருவரும் விரை வில் மன்றில் ஆஜர் செய்யப்பட விருப்பதாக காவல்துறையினர். தெரிவித்துள்ளனர்.

இதேவேளைஅம்பேபிட்டியவின் படுகொலை தொடர்பான சந்தேக நபர்கள் சார்பில் சட்டத்தரணிகள் உதவியை வழங்காமல் இருப் பதற்கு சட்டதரணிகளால் முடியு மென இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

ஆயினும் எமது சங்க சட்டத்தரணிகளிடம் அவ்வாறான ஓர் வேண்டுகோள் விடுக்கப்பட வில்லையென சங்கத்தின் தலை வர் தெரிவித்துள்ளார்.

### கணவனால் கைவிடப்பட்ட நிலையில் 3300 பெண்கள்

(மட்டக்களப்ப)

மட்டக்களப்பு மாவட்டத்தில் 12 பிரதேச செயலகப் பிரிவுகளிலுள்ள கணவனால் கைவிடப்பட்ட பெண் களில் சுமார் 4300 பிள்ளைகள் தங்கி வாழ்வதாக மாவட்ட செலயக சமுர்த்தி அலுவலகப் பிரதிப் பணிப் பாளர் இரா. நெடுஞ்செழியன் தெரி வித்தார்.

இவர்களுள் 1 வயது முதல் 5 வரையான 643 பிள்ளைகளும், 6 வயது முதல் 8 வயது வரை யான 2439 பிள்ளைகளும், 18 வய துக்கு மேற்பட்ட 1180 பிள்ளை களும் உள்ளதாக அந்த ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்மாவட்டத்தில் சுமார் 3300 பெண்கள் கணவனால் கைவிடப் பட்ட நிலையில் வாழ்கின்றனர் என் றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நீதிபதிகளின் பாதுகாப்பிற்கு விசேட பாதுகாப்புப் பிரிவு

(கொழும்பு)

மேல்நீதிமன்ற நீதிபதிகளின் பாதுகாப்பிற்கென விசேட பாது காப்புப்பிரிவு ஒன்று சனாதிபதியின் பணிப்பின் பேரில் புதிதாக ஏற்படுத் தப்பட்டுள்ளது.

இதற்காக பொலிஸ் விசேட அதிரடிப்படையின் பயிற்சிபெற்ற விசேட பிரிவொன்று அதிரடிப்படை யின் கட்டளை இடும் அதிகாரி யான பிரதி பொலிஸ்மா அதிபர் நிமல் லியனகே தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பொலிஸ் திணைக்களமும் நீதிபதிகளின் பாதுகாப்பிற்கென புதிய பிரி வொன்றை ஆரம்பித்துள்ளது. சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் மேற்பார்வையில் இந்தப் பிரிவு இயங்கவுள்ளது.

இந்தப் பிரிவைச் சேர்ந்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் விசேட அதிரடிப்படையில் பயிற்சி பெறுவார்கள் எனவும், இதற்காக புதிதாக நிறுவப்பட்டுள்ள ஒரு பிரி வைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் பயிற்சியை முடித்துக்கொள்ளும் வரை விசேட அதிரடிப்படையினர் நீதிபதிகளுக்குப் பாதுகாப்பு வழங் கும் கடமையில் ஈடுபடுத்தப்படு வார்கள் எனவும் தெரிவிக்கப்படு கிறது.

# கட்டட அலங்காரப் பொருட்கள் உற்பத்தியில் பெண்கள்

வீ.பிரதீபன்

சிந்தனைத் தெளிவும், விழிப்புணர்வும் இருப்பினும் கூட முரண்பட்ட சமுதாயத்துடன் மோதி, நிமிர்ந்து நிற்கும் மனத் துணிவு அனைத்துப் பெண்களுக்குள்ளும் இயல்பாய் எழ வேண்டும். பெண்களுக்கு என்று வரைவிலக்கணம் தேடிக் கொண்டிருக்கும் இக்கால சமுதாயத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் பெண்கள் சமூகத்திற்கும், குடும்பத்திற்கும், ஒரு சுமையாக இருக்கக் கூடாது என்ற தெளிவான நோக்குடன் இன்று படித்துப்பட்டம், பதவி, கௌரவம் என்று ஒரு பகுதிப் பெண்கள் இதில் நாளாந்த வாழ்வுக்காகவும், ஒரு வேளை




உணவுக்காகவும் தங்கள் குடும்பப் பொறுப்புக்களை எல்லாம் தலையில் சுமந்தபடி நிறைவேறா ஆசைகளுடன் வயல் நிலங்களிலும் தொழிற்சாலைகளிலும் கூலி வேலை செய்து நாளாந்த வாழ்க்கைச் செலவுக்காக பாடுபட்டு உழைகின்றார்கள். இவ்வாறு வாழ்க்கையில் கஸ்டப்படும் பெண்களுக்கு ஒரு சுய தொழில் வேண்டும். சமூகத்தில் அவர்களை உயர்த்த வேண்டும் என்ற தூய நோக்குடன் சில அமைப்புக்கள் முன்வந்து பெண்களுக்கான பயிற்சி நிலையங்களை அமைத்து அவர்களை இனங்கண்டு அவர்களுக்கென்று பல கைத்தொழிற் பயிற்சி களைக் கொடுத்து வருகின்றார்கள்.

இந்த அமைப்புகளில் முன் உதாரணமாக சமுதாய முன்னேற்ற நிலையம் விளங்குகின்றது.

போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் மேம்பாட்டிற்காக உழைத்தல் என்ற இலக்குடன் இயங்கி வரும் சமுதாய முன்னேற்ற நிலையத்தால் பெண்களுக்கான கட்டட அலங்காரப் பொருட்கள், பயிற்சிப் பட்டறை ஒன்றை அமைத்து அதற்கான ஆசிரியர்களை வெளியிடங்களில் இருந்து வரவழைத்து முதல் முதலாக 30 பேருடன் 3 மாதகால பயிற்சி வகுப்பு ஆரம்பிக்கப்பட்டது. இந்த மூன்று மாதகால பயிற்சியின் போது அவர்களை ஊக்குவிப்பதற்காக கொடுப்பனவுகளும் வழங்கப்பட்டு வந்தன. பயிற்சி வகுப்புநிறைவடைந்து அதில் திற மையான ஒரு பெண் முகாமையாளராகத் தெரிவு செய்யப்பட்டார். சிறிய பயிற்சிப் பட்டறையாக ஆரம்பிக்கப்பட்டது இப் பயிற்சிப் பட்டறை தற்போது பெரியதொரு வளர்ச்சியுடன் இயங்கி வருகின்றது. பயிற்சியின் ஆரம்பத்தில் கட்டடத்தின் அலங்காரப் பொருட்கள் செய்யும் அச்சுக்களைக் கொழும்பில் இருந்தே பெற்றார்கள். ஆனால் இப்போது அந்த அச்சுக்களைச் செய்வ தற்கான மூலப்பொருட்களை இங்கே பெற்று அச்சுக்களைச் செய்வதற்கான பயிற்சிகளைக் கொடுத்து அந்த அச்சுக்களை இந்த பெண்களே செய்து வருகின்றார்கள். இங்கு செய்யப்படும் கட்டட அலங்காரப் பொருட்கள் சந்தையில் நல்ல மதிப்புடனும், தரமானதுமாக விரைவில் விற்பனையாகியும் வருகின்றது. சாதாரணமான ஒரு பயிற்சிப் பட்டறையாக இயங்கிய நிலையம் தற்போது கட்டட அலங்காரப் பொருட்களை உற்பத்தி செய்து விற்பனை செய்யும் ஒரு நிறு



வனமாக இயங்கி வருகின்றது. மாதம் ஒன்றிற்கு சுமார்100,000 ரூபா மொத்த வருமானத்துடன் இயங்கி வருகின்றது. இங்கே அரியப்படும் கட்டடப்பொருட்கள் அனைத்துமே பெண்களாலே சிறந்ததொரு பொறிமுறையில் உருவாக்கப்பட்டு வடிவமைக்கப் பட்டது. தரமான ஒரு பொருளாக விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. இந்தத் தொழிற் பயிற்சி நிலையம் பெண்களால் சிறந்த ஒரு முகாமைத்துவத்துடன் இயங்கி வருவதைக் காணக்கூடியதாக உள்ளது. சமுதாய முன்னேற்ற நிலையம் இது மட்டுமல்லாது இது போன்ற பல்வேறு தொழிற்பயிற்சிகளைப் பெண்களுக்காக ஆரம்பித்துச் செயற்படுத்தி வருகிறது. அந்த வகையில் இந்தக் கட்டட அலங்காரப் பொருட்களை பெண்கள் மத்தியில் ஒரு கைத்தொழிலாகக் கொண்டு



வரவேண்டும் என்ற ஒரேயொரு நோக்குடன் முன் வந்தமையினால் இன்று அந்த முன்னேற்றத்தில் வெற்றியடைந்துள்ளனர். சமூக நோக்குடன் செயற்பட்டு வரும் நிறுவனங்கள் இவ்வாறு பெண்களுக்கான தொழிற்பயிற்சியினை அளிப்பதன் மூலம் நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சியடைவதோடு சமுகப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் வழிசமைக்கும்.

எனவே பெண்களுக்கான சுயதொழில் பயிற்சி வேண்டும். சுயதொழில் வேண்டும் அந்த வகையில் இவற்றுக்கான ஆரம்பக் கட்டவேலைகளைச் சமுதாய முன் னேற்ற நிலையம் மேற்கொண்டு வருகின்றன. இங்கு வடிவமைக்கப்படும் கட்டட அலங்காரப் பொருட்களை விற்பனை செய்வதற்கு இரண்டு விற்பனை நிலையங்களைத் திறந்து வைத்துள்ளது. அதில் ஒன்று கரடிப் போக்குச் சந்திக்கு அருகாமையிலும், இரண்டாவது மாங்குளத்திலும் திறந்து வைத்து விற்பனைகளைச் செய்து வருகின்றது. இனி வரும் காலங்களில் இந்தப் பயிற்சி நிலையம் பெரியதொரு உற்பத்திக் கூடமாக நிறுவனமாக மாற்றமடையும்.

# பொதுமக்கள் உதவியுடன் வளரும் கிளி/ சிவநகர் அ.த.க பாடசாலை

(அலுவலகசெய்தியாளர்)

கிளிநொச்சி உருத்திரபுரம் கிளி/ சிவநகர் அ.த.க பாடசாலையின் நவீன கல்வி மாற்றத்திற்கேற்ப புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும் மக்கள் மற்றும் சிவநகர் பொதுமக்களின் உதவியுடன் மேற்படி பாடசாலையின் தேவைகள் பூர்த்தி செய்யப்பெற்று வருகின்றன.

இந்தவகையில் சிவநகர் கிராம அபிவிருத்திச் சங்கம் மேற் படி பாடசாலைக்கு விஞ்ஞான ஆய்வு கூடத்தினையும், சிவநகர் கிராம பாடசாலை மாணவர்களின் பெற்றோரின் உதவியுடன் தரம் 01 மாணவர்களுக்கான மண்டபமும், மாவீரர் மண்டபமும், கனடா நாட்டில் வதியும் முருகேசு குடும்பத்தினர் பாடசாலைப் பூங்காவிற்கான சுற்றுமதிலினையும், சுவிஸ் நாட்டில் வதியும் வைத்திலிங்கம் குடும்பத்தினர் சிறுவர் பூங்காவினையும், பிரான்ஸ் நாட்டில் வதியும் அருளம்பலம் பாடசாலைக் குழாய் வழிக் குடிநீரினையும், சுவிஸ்நாட்டில் வதியும் ஈசா பாடசாலைக்குரிய விளையாட்டு உபகரணங்களையும், பிரான்ஸ் நாட்டில் வதியும் குமணன் பாடசாலை மாணவர் விபரக் கோவை அலுமாரியினையும், பிரான்ஸ் இத்தாலி நாடுகளில் வதியும் தவம், லக்ஷமன் ஆகியோர் பாடசாலைச் சுற்று வேலியினையும், சுவிஸ் நாட்டில் வதியும் முருகதாசன், சற்குரு, பிரபா ஆகியோர் பாடசாலை கட்டட தேவைக்கென சிமெந்துக்கான உதவிகளையும் வழங்கியுள்ளனர்.

அரசினால் ஒட்டுமொத்தமாக தமிழ் மாணவர் கல்வி புறக் கணிக்கப்பட்ட நிலையில் பாடசாலையின் வளர்ச்சிக்கென பொது மக்களின் உதவியுடன் மேற்படி பாடசாலைத் தேவைகள் உடனுக்குடன் பூர்த்தி செய்யப்பெற்று வருவதுடன் வெகுவிரைவில் சிறார்களின் நன்மை கருதி மேற்படி பாடசாலையில் சிறுவர் கணினிப் பூங்கா அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (சோ)

## விசேட மாநாடு

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சி அடுத்தமாதம் விசேட மாநாடு ஒன்றை நடத்தத் தீர்மானித்துள்ளது. இதற்கான முன்னேற்பாடுகளை எடுக்குமாறு மகாவலி அபிவிருத்தி விவகார அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவுக்கு சனாதிபதி சந்திரிகா ஆலோசனை கூறியிருக்கிறார்.

அதன்படி கட்சியின் ஸ்தாபகரும், முன்னாள் பிரதமருமான பண்டாரநாயக்கவின் பிறந்த தினமான சனவரி எட்டாம் திகதி மாநாட்டை நடத்தக் கட்சி உயர்பீடம தீர்மானித்துள்ளது. இதன்போது சனாதிபதி சந்திரிகா முக்கிய பல தீர்மானங்களை மக்கள் முன் வைக்கவிருப்பதாகவும் கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# மீள்குடியமர்ந்த ஒரு பகுதி மக்களுக்கு உணவல்லாத பொருட்கள் வழங்கல்

(அலுவலகசெய்தியாளர்)

கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட மீள் குடியமர்ந்த மக்களுக்கான உணவல்லாத கொடுப்பனவுகள் 'பாஜ்' நிறுவனத்தினூடாக வழங்கப்பட்டுள்ளன.





முன்னர் வழங்கப்பட்ட கொடுப்பனவுகளின் தொடர்ச்சியாக விடுபட்ட கிராமங்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. இதன் அடிப் படையில் நேற்றுக் கிளிநொச்சி செல்வாநகர், பாரதிபுரம், கிருஸ்ணபுரம், விவேகானந்த நகர் பகுதிகளில் வாழும் 272 குடும்பங்களுக்கு உணவல்லாத பொருட்கள் வழங்கப்பட்டன.

நேற்றுக் காலை 10.00 மணியளவில் கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் வைத்து இப் பொருட்கள் வழங்கப் பட்டன. இவ் உணவல்லாத பாவனைப் பொருட்களில் கூரை விரிப்பு (தறப்பாள்) பாய இரண்டு, கயிறு, மண்வெட்டி, கத்தி, அலவாங்கு, குடம், வாளி, அலுமினியப் பாத்திரம் நான்கு, நுளம்பு வலை என்பன வழங்கப்பட்டன.

அத்துடன் எதிர் வரும் 03.12.2004 அன்று கோணாவில் பகுதி மக்களுக்கும் இப் பொருட்கள் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக கரைச்சிப் பிரதேச செயலாளர் தெரிவித்துள்ளார். (கு)


மாவீரர் எழுச்சி நாட்களின் ஆரம்ப நாள் நிகழ்வில்...




மாவீரர் நாளன்று...

## 22/11/2004-28/11/2004




### 22

*.தமிழர் தாயகப் பகுதிகளில் மாவீரர்களின் பெற்றோர் கௌரவிக்கப்பட்டனர்.

*.சுன்னாகத்தில் இடம் பெற்ற வீதி விபத்தில் ஒருவர் பலி.

*. பருத்தித்துறையில் மின்னல் தாக்கி ஒருவர் பலி.

*. பொலநறுவையில் முஸ்லிம்இளைஞர் சுட்டுக் கொலை.

### 23

*. போர் தான் அரசின் முடிவாக இருக்குமானால் பிரசவ வேதனைகளை அனுபவிக்க எமது மக்கள் தயாரெ ா பாராளுமன்றத்தில் தமிழ்த் தேசிய பாராளுமன்ற உறுப்பினர் சிவநேசன் தெரிவிப்பு.

*. மாவீரர்களின் பெற்றோர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு கிளிநொச்சியில் சிறப்பாக நடைபெற்றது.


கிளிநொச்சியில்...

*. மன்னாரில் மாவீரர் நினைவுப் பந்தல்கள் அமைக்க இராணுவத்தினர் தடைவிதித்தனர்.

*. அமைச்சரின் பாதுகாவலர் போல் சென்ற நான்கு பேரை வெலிக்கடைப் பொலிசார் கைது செய்தனர்.

*. வலிகாமம் வடக்கின் அதியுயர்பாதுகாப்பு வலயத்தை அண்டிய குப்பிளான் பகுதியில் கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்ட டெனிஸ் கண்ணிவெடியகற்றும் பிரிவு ஊழியர்கள் நிர்வாகத்திற்கு எதிராகப் போராட்டம் நடத்தினர்.

*. பாரிய யுத்தம் ஒன்றுக்கான தயார்ப்படுத்தலில் இராணுவம் ஈடுபட்டு வருவதாக தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர் பாராளுமன்றத்தில் தெரிவிப்பு.

### 24

*. மன்னாரில் மாவீரர் தினநிகழ்வில் ஏற்றிய தேசியக் கொடியை படையினர் அகற்றியதால் படையினருக்கு எதிராக ஆர்ப்பாட்டம் இடம் பெற்றது.


*. போர்நிறுத்தம் முறிவடைந்தால் நாட்டில் பொருளாதாரம் சீர்குலையுமென உலகவங்கியின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி பீற்றர் ஹெரோல்ட் கொழும்பில் செய்தியாளர்களிடம் தெரிவிப்பு.

*.அரசாங்க சமாதான செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபால வவுனியாவிற்கு விஜயம்.

*. சனாதிபதி சந்திரிகா ஈரானுக்கு விஜயம்.

*.இனம் தெரியாதோரின் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி வந்தாறுமூலையில் இருவர் பலி.

*. புதுக்குடியிருப்பு பிரதேச மாவீரர்களின் பெற்றோர் கௌரவிக்கப்பட்டனர்.


புதுக்குடியிருப்பில்..

*. யுத்தமோ சமாதானமோ எதற்கும் தமிழர்கள் தயார் என யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் பாராளுமன்றத்தில் தெரிவிப்பு.

### 25.

*.மாவீரர் நாளின் ஆரம்ப நாள் நிகழ்வுகள் தமிழீழத்தின் அனைத்துப் பகுதிகளிலும் உணர்வுபூர்வமாக ஆரம்பமானது.


மாவீரர் நினைவு வளைவு...

*. தமிழீழக் கடற்படையின் விசேட அணிவகுப்புடன் முல்லைத்தீவில் மாவீரர் நாள் நிகழ்வுகள் ஆரம்பம்


விசேட அணிவகுப்பு

*. மாவீரர் எழுச்சி நாட்களில் ஆரம்ப நாள் நிகழ்வில் மாவீரர்களின் உருவப் படங்களுக்கு தமிழீழ தேசியத் தலைவர் ஈகச்சுடரேற்றி மலர் மாலை அணிவித்தார்.

*. மாவீரர் தின நிகழ்வுகளில் கலந்து கொண்ட மக்கள் மீது மன்னாரிலும் வவுனியாவிலும் படையினர் துப்பாக்கிச் சூடு நடத்தியும் கண்மூடித்தனமான தாக்குதலையும் மேற்கொண்டனர்.

*.அக்கரைப்பற்றில் இனம் தெரியாதோரால் போராளி ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

*. மன்னாரில் இராணுவத்தினர் மக்கள் மீது மேற்கொண்ட அடாவடித்தனத்தை ஆட்சேபித்து தமிழரசுக் கட்சியினர் பாராளுமன்றத்தில் போராட்டம் நடாத்தி பாராளுமன்ற அமர்வுகள் ஒத்திவைக்கப்பட்டது.

*. கொழும்பில் ஈ.என்.டி.எல்.எவ் உறுப்பினர் சுட்டுக்கொலை

*. "வரலாறு தந்த வல்லமை" ஒலிப் பேழை வெளியீட்டு விழா பண்பாட்டு மண்டபத்தில் இடம் பெற்றது.


ஒலிப்பேழை வெளியீட்டில்

### 26

*.தமிழர் தாயகம் எங்கும் தமிழீழ தேசியத்தலைவரின் பிறந்தநாள் நிகழ்வு வெகுவிமர்சையாகக் கொண்டாடப்பட்டது.


பிறந்த நாள் நிகழ்வில்

*. தமிழ் ஊடக அறிவியற்கல்லூரிக்கான அடிக்கல் நாட்டு விழா கிளிநொச்சியில் இடம் பெற்றது.


அடிக்கல் நாட்டு விழா

*. திருமலையில் மாவீரர் தின நிகழ்வுகளைக் குழப்பும் வகையில் ஜே.வி.பி.யினர் நடந்து கொண்டனர்.

*நுணாவிலில் இரு இராணுவ சிப்பாய்களை இனம்தெரியாதோர் கத்தியால் வெட்டிக் காயப்படுத்தினர்.

*மட்டக்களப்பு வந்தாறுமூலையில் இனம் தெரியாதோரால் ஒருவர் சுட்டுக்கொலை

### 27


*.மாவீரர் தின இறுதி நாள் நிகழ்வுகள் தாயகமெங்கும் மற்றும் தமிழர்கள் வாழும் நாடுகளிலும் உணர்வுடன் அனுஷ்டிக்கப்பட்டது.

*பொறுமைக்கும், எதிர்பார்ப்பிற்கும் எல்லையுண்டு பேச்சுவார்த்தைகள் உடன் ஆரம்பிக்கப்பட வேண்டுமென அரசிற்கு அழைப்பு ஒன்றை விடுக்க விரும்புகின்றோம் என மாவீரர் தின உரையில் தமிழீழ தேசியத்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

*அமெரிக்கா, அவுஸ்திரேலியா, கனடா போன்ற நாடுகளிலும் மாவீரர் தின நிகழ்வு கொண்டாடப்பட்டது.


அமெரிக்காவில்...

*இலங்கையில் போரா? சமாதானமா? என்பதை சனாதிபதியே தீர்மானிக்க வேண்டுமென விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகரும்



தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம் லண்டனில் நடைபெற்ற மாவீரர் தின உரையில் தெரிவிப்பு.

*ஆண்டான்குளத்தில் மாவீரர் நினைவாலயம் திறந்து வைக்கப்பட்டது.


நினைவாலயம் திறப்பு

### 28.

*அரசியல் நாகரிக மற்ற முறையில் சனாதிபதி சந்திரிகா நாடகமாடி வருகிறார் என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜீ.எல் பீரிஸ் செய்தியாளர்களிடம் கூறினார்.

* இனப்பிரச்சினை விடயத்தில் நோர்வே அரசு பக்கசார்பாக செயற்படுகின்றது என்ற குற்றச்சாட்டை இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் அநுராதபுரத்தில் உரையாற்றிய வேளை மறுத்தார்.

* இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியான களுவாஞ்சிக்குடி பட்டிருப்பு தேசிய பாடசாலையில் அமைக்கப்பட்டுள்ள மாவீரர் நினைவாலயத்திற்கு மட்டு - அம்பாறை



சிறப்புத் தளபதி கேணல் பானு திடீர் விஜயம்.

# படையிலிருந்து தப்பிஓடியோர் சட்டபூர்வமாக விலகச் சந்தர்ப்பம்

(கொழும்பு)

கம்பஹா, கொழும்பு களுத்துறை அனுராதபுரம் மற்றும் குருநாகல் மாவட்டங்களில் இருக்கும், படையில் இருந்து தப்பி வந்தோர் சட்டபூர்வமாக படையில் இருந்து விலகிக்கொள்ளும் சந்தர்ப்பம் மீண்டும் ஒரு முறை வழங்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 6 ஆம் திகதி முதல் 31 ஆம் திகதி வரை இது தொடர்பான மன்னிப்புக் காலம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இதேவேளை கடந்த யுத்தக்காலத்தின் போது சுமார் 50ஆயிரம் பேர் வரையில் படைகளில் இருந்து தப்பிச் சென்றிருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

# நிதிஒதுக்கீட்டு விவகாரம் அமைச்சர்கள் இடையில் முறுகல்

(கொழும்பு)

அரசாங்கத்தின் இரண்டு அமைச்சர்களுக்கு இடையில் முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது. நிதியமைச்சர் சரத்அமுனுகம சமர்ப்பித்த வரவு செலவுத்திட்டத்தில் தமது மலைநாட்டு அபிவிருத்தி அமைச்சுக்கு உரிய நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை என அமைச்சர் டி.எம். ஜயரட்ன தெரிவித்திருந்தார் இதன் காரணமாக தமக்கு மக்கள் மத்தியில் அபகீர்த்தி ஏற்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டிருந்தார்

ஆனால், இதனை மறுத்துள்ள அமைச்சர் சரத்அமுனுகம, அமைச்சர் டி.எம். ஜயரட்ன வரவு செலவுத்திட்ட அம்சங்களை சரியாக அறிந்திருக்காத நிலையில் கருத்து வெளியிட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். இதேவேளை இந்த விடயம் குறித்து தாம் எதிர் வரும் அமைச்சரவை கூட்டத்தில் தமது அதிருப்தியை வெளியிடப் போவதாகவும் அமைச்சர் டி.எம்.ஜயரட்ன தெரிவித்துள்ளார். (32)

# பாடசாலைக் கல்வியை தனியார் மயமாக்கமாட்டோம்

## - பிரதமர் மகிந்தராஜபக்ஷ

(கொழும்பு)

இலங்கையின் பாடசாலைக் கல்வியை தனியார் மயப்படுத்த அரசாங்கம் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லையென சிறிலங்கா பிரதமர் மகிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார்.

பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதற்காக தனியார் துறையின் ஒத்துழைப்பை மாத்திரம் எதிர்பார்ப்பதாகவும் சுட்டிக்காட்டினார்.

பல்லேகல பிலியத்த தர்மபால மகளிர் வித்தியாலயத்தில் இடம் பெற்ற வருடாந்த பரிசளிப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில், இச்செயற்றிட்டத்தின் மூலம் கிராமங்களில் உள்ள வசதி குறைந்த பாடசாலைகளை அபிவிருத்தி செய்யமுடியும் எனவும் இதன் மூலம் சிறந்த விரிவான நூலக சேவையை ஆரம்பிப்பதற்கும் நடவடிக்கையெடுக்கவுள்ளதாகவும், மேலும் தகவல் தொழில்நுட்பத்தை பாடசாலை பாடவிதானத்திற்குள் உள்ளடக்குவதன்மூலம் பாடசாலை மாணவர்களின் அறிவை முன்னேற்றமுடியும் என்றும் தெரிவித்தார்.

தனியார் துறையினரின் ஒத்துழைப்பைப் பெற்று பாடசாலைகளுக்குத் தேவையான அத்தியாவசிய பொருட்களைப் பூர்த்திசெய்யவுள்ளதாகவும் இதனைக் கொண்டு பாடசாலைகளை தனியார் மயப்படுத்துவதாக அர்த்தப்படாது. இதனை சிலர் தவறான முறையில் விபரிக்கின்றனர்.

நிறுவனங்கள் மற்றும் வருமானம் பெறுபவர்களுக்கு சமூகப் பொறுப்பு சுமத்தப்பட்டுள்ளது. சமூகப் பொறுப்பு என்ற அடிப்படையில் ஒவ்வொரு பாடசாலைகளினையும் முன்னேற்றுவதற்கு அவர்கள் முன்வருவதற்கும் அரசாங்கம் தற்போது தலையிட்டுவருகிறது எனவும் பிரதமர் மேலும் தெரிவித்தார்.

# ஆழ ஊடுருவித் தாக்கும் படையணி புனரமைப்பு!

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் பகுதிகளினுள் ஊடுருவி முக்கிய உறுப்பினர்கள் மீது தாக்குதல் நடத்துவதற்கென அமெரிக்காவால் அமைக்கப்பட்ட சிறிலங்கா இராணுவத்தின் ஆழ ஊடுருவித் தாக்கும் படையணி விசேடமாக புனரமைக்கப்பட்டு வருவதாகவும் அவர்களின் எண்ணிக்கையும் உயர்த்தப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது. இவர்களுக்கு என விசேடமாக ஆயுதங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

# செல்போன்களுக்கு நேற்று முதல் தடை!

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர்கள் கையடக்கத் தொலைபேசிகளை சபைக்குள் எடுத்துவருவது நேற்று முதல் தடை செய்யப்பட்டுள்ளது. சபாநாயகர் டபிள்யூ ஜே.எம். லொக்குபண்டார கடந்த 27ஆம் திகதி இது குறித்து அறிவித்திருந்தார்.

இத்தடை உத்தரவை கடுமையான முறையில் நடைமுறைப்படுத்தவும் ஒழுங்கு செய்யப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். ஐ.ம.சு.மு. அரசாங்கத்தின் முதலாவது வரவு-செலவுத் திட்டத்தின் இரண்டாவது வாசிப்பு மீதான விவாதத்திற்கு நிதியமைச்சர் சரத்அமுனுகம பதிலளித்து உரையாற்றியவேளை, சபாநாயகர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அமைச்சர் உரையாற்றிக் கொண்டிருக்கும்போது சபையினுள் கையடக்கத் தொலைபேசியொன்றின் அழைப்புச் சத்தம் நீண்ட நேரமாக ஒலித்துக் கொண்டிருந்தது. இதன்போதே இவ்வாறு தெரிவித்துள்ளார். கட்சித் தலைவர்கள் கூட்டத்திலும் இது சம்பந்தமாக பேசப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார்.


## க.வ.ப.நோ.கூ. சங்கம், பரந்தன், (வ/து)

## கிளைக்குழுத் தேர்தல் - 2004

## அறிவித்தல்

வடக்கு கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும் (வடக்கு கிழக்கு)அவர்களினால் அங்கீகரிக்கப்பட்டதும் 1998.05 .19ஆம் திகதி1028/06 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான வடகிழக்கு மாகாண எல்லைக்குட்பட்ட பகுதியில் இயங்கிவரும் வரையறுக்கப்பட்ட பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைக்குழுக்களை தெரிவு செய்வதற்கான கிளைப்பொதுச் சபைக் கூட்டங்கள் பின்வரும் கால அட்டவணையின்படி நடைபெறுவதற்கான ஒழுங்குகள் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர், கிளிநொச்சி. அவர்களினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**காலம் :- 2004.12.04 ஆம் திகதி சனிக்கிழமை**

**நேரம் :- முற்பகல் 09.30 மணி**

| தொ. இல. | கிளை இல. | கிளையின் பெயர் | கிளைப் பொதுச்சபைக் கூட்டம் நடைபெறும் இடங்கள் |
|---|---|---|---|
| 01. | 01. | பரந்தன் | தலைமை அலுவலகம், க.வ.ப.நோ.கூ.சங்கம்,பரந்தன் |
| 02. | 10. | உமையாள்புரம் | தலைமை அலுவலகம், க.வ.ப.நோ.கூ.சங்கம்,பரந்தன், |
| 03. | 04. | ஊரியான் | முருகானந்தா மகா வித்தியாலயம், |
| 04. | 17. | கல்மடுநகர் | கல்மடு அ.த.க.பாடசாலை, கல்மடு, |
| 05. | 15. | தருமபுரம் | தருமபுரம் வெதுப்பக வளாகம், |
| 06. | 09. | புன்னைநீராவி | புன்னைநீராவி அ.த.க.பாடசாலை, |
| 07. | 16. | பிரமந்தனாறு | பிரமந்தனாறு மகா வித்தியாலயம், |
| 08. | 08. | கலவெட்டித்திடல் | நாகேஸ்வரா வித்தியாலயம், கலவெட்டித்திடல், |
| 09. | 07. | புளியம்பொக்கணை | நாகேந்திரா .வித்தியாலயம், புளியம்பொக்கணை, |
| 10. | 14. | பொறிக்கடவை | பரந்தன் அ.த.க.பாடசாலை |
| 11. | 12. | தட்டுவங்கொட்டி | கண்ணகி நகர், அ.த.க.பாடசாலை, |
| 12. | 02. | இரணைமடு மேற்கு | முரசுமோட்டை றோ.க.பாடசாலை, முரசு, |
| 13. | 13. | குமரபுரம் | பரந்தன் இந்து மகா வித்தியாலயம், பரந்தன், |

**காலம் :- 2004. 12. 04 ஆம் திகதி சனிக்கிழமை**

**நேரம் :- பிற்பகல் 01.00 மணி**

| | | | |
|---|---|---|---|
| 14. | 11. | ஆனையிறவு | தலைமை அலுவலகம், க.வ.ப.நோ.கூ.ச.பரந்தன், |
| 15. | 03. | முரசுமோட்டை | முருகானந்தா மகா வித்தியாலயம், முரசுமோட்டை, |
| 16. | 05. | கண்டாவளை/ பன்றிசுட்டான். | கண்டாவளை மகா வித்தியாலயம். |

**முக்கிய குறிப்புக்கள்:-**

01. வாக்களிக்கத் தகுதியுள்ள அங்கத்தவர்களுக்கு தனித்தனி அழைப்புக்கள் அனுப்பி வைக்கப்படவில்லை. இந்த அறிவித்தலை சொந்த அறிவித்தலாகத் தயவு செய்து ஏற்றுக்கொள்ளவும்.

02. இது சம்பந்தமான மேலதிக தகவல்களை கிளைநிலையங்களிலும், தலைமை அலுவலகத்திலும் பார்வையிடலாம்.

**செயலாளர்,**
**கரைச்சி வடக்கு ப.நோ.கூ.ச.**
**பரந்தன்.**

(சி-10776)



## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் கிளிநொச்சிக் கிளை







## வாகனச் சாரதிகள் தேவை

எமது நிறுவனத்திற்கு சாரதிகள்தேவைப் படுகின்றனர். தகுதியுடையவர்கள் தங்கள் சுயவிபரங்களுடன் சாரதி அனுமதிப்பத்திரத்தின் நிழற்படப் பிரதியுடன் விண்ணப்பங்களை எதிர் வரும் 07.12.2004 இற்கு முன்னர் நேரிலோ தபால் மூலமாகவோ எமக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

க.கணேஸ்,
கௌரவ செயலாளர்.

(சி.10645)





சிவகங்கை அருகே நடந்த விபத்தில் பேருந்தும் பாரஊர்தியும் நேருக்கு நேர் மோதிக்கொண்டதில் அப்பளம் போல் நொருங்கிய காரையும், விபத்தில் பலியானோரின் உடல்களையும் காணலாம்.

# இந்தியா-ஆசியான் ஒப்பந்தம் லாவோஸ் பிரதமர் நம்பிக்கை

(வியன்டியானே)

அமைதி மற்றும் முன்னேற்றத் துக்கான ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திடுவது இந்தியா-ஆசியான் அமைப்பு இடையிலான வளமான எதிர்காலம் மற்றும் நீண்டகால ஒத்துழைப்பை உறுதிப் படுத்தும் என்று லாவோஸ் பிரதமர் பவுன்ஹங் ஓராசித் நம்பிக்கை தெரிவித்தார்.

லாவோஸ் நாட்டில் உள்ள வியான்டியானேவில் இந்தியா-ஆசியான் 3ஆம் உச்சிமாநாடு கடந்த ஞாயிற்றுக்கிழமை தொடங்கியது. லாவோஸ் பிரதமர் பவுண் ஹங் ஓராசித் தொடக்க உரையாற்றினார். அதில் அவர் அமைதி மற்றும் முன்னேற்றத்திற்கான ஒப்பந்தத்தில் இந்தியாவும் ஆசியான் அமைப்பும் கையெழுத்திடுகின்றன. இதன் மூலம் இந்தியாவின் வளமான எதிர்காலமும் இந்தியா-ஆசியான் அமைப்பு இடையே நீண்டகால ஒத்துழைப்பு ஏற்படுவதும் உறுதியாகும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

தெற்காசியாவில் அமுலில் உள்ள அமைதி மற்றும் ஒத்துழைப்பு ஒப்பந்தம் நன்னடத்தை விதியாக மாற்றப்படவேண்டும். ஆசியான் அமைப்பு உறுப்பு நாடுகளை மட்டுமன்றி அதற்கு அப்பாற்பட்ட மற்ற நாடுகளின் உறவுகளையும் இந்த விதிமுறை வழி நடத்துவதாக அமையவேண்டும். என்றும் ஓராசித் விருப்பம் தெரிவித்தார்.

மாநாட்டில் பங்கேற்க வந்துள்ள பிரதமர் மன்மோகன் சிங், லாவோஸ அதிபர் காம்டே ஷிபான்டன்னுடன் நேற்று முன்தினம் காலை பேச்சுநடத்தினார். இருதரப்பு உறவு, பிராந்திய மற்றும் சர்வதேச பிரச்சினைகள் குறித்துப் பேசினார். ஐ.நா.பாதுகாப்பு கவுன்சில் இந்தியாவை நிரந்தர உறுப்பினராக்க காம்டே ஆதரவு தெரிவித்தார். தகவல் தொழில்நுட்பம் உள்ளிட்ட துறைகளில் லாவோசுக்கு உதவிகள் வழங்குவதாக காம்டேவிடம் மன்மோகன்சிங் உறுதி அளித்தார். இச்சந்திப்பு 45 நிமிடங்கள் நடந்தது.


## கரைதுரைபற்று ப.நோ.கூ.சங்கம்
## பகிரங்க ஏலவிற்பனை

கரைதுரைபற்று ப.நோ.கூ.சங்கம் வாகனப் பகுதியில் பாவிக்க முடியாத நிலையில் உள்ள (லொறி உழவுஇயந்திரம்) இரும்புப் பொருட்கள் உதிரிப்பாகங்கள் உட்பட பலதரப்பட்ட பொருட்கள் 11.12.2004 ஆம் திகதி காலை 9.30 மணியளவில் க.ப.ப.நோ.கூ.சங்க தலைமைக் காரியாலயம் தண்ணீர் ஊற்று வாகனப் பகுதயில் ஏலவிற்பனை நடைபெறும் என்பதை அறியத் தருகின்றேன் பொருட்களை பார்வையிடவிரும்புவோர் அலுவலக நாட்களில் பார்வையிடலாம்

பொது முகாமையாளர்.
க.ப..ப.நோ.கூ.சங்கம்

(சி.10646)


# லல்லு - பஸ்வான் மோதல் பிரதமர் நடவடிக்கை எடுப்பார்

## காங்கிரஸ் அறிவிப்பு

(புதுடில்லி)

**பீகார் மாநிலத்தில் லல்லு-பஸ்வான் மோதல் குறித்து பிரதமர் மன மோகன்சிங் நடவடிக்கை எடுப்பார் என்று காங்கிரஸ் கட்சி அறிவித்துள்ளது.**

பீகார் மாநிலத்தில் லல்லு பிரசாத் தலைமையிலான ராஷ்ட்ரீய ஜனதா தளம், ராம் விலாஸ் பஸ்வானின் லோக் ஜனசக்தி, காங்கிரஸ் ஆகிய கட்சிகள் இணைந்து பாராளுமன்றத் தேர்தலில் கூட்டணி அமைத்துப் போட்டியிட்டன. தற்போது மத்திய மந்திரி சபையில் லல்லுவும், பஸ்வானும் மந்திரிகளாக இருக்கின்றார்கள்.

இந்தச் சூழ்நிலையில் பீகார் சட்டசபைக்கு அடுத்த ஆண்டு தேர்தல் நடக்கவிருக்கிறது. இதில் லோக் ஜனசக்தி தனித்துப் போட்டியிடும் என்று பஸ்வான் அறிவித்துவிட்டார். தற்போது மாநிலம் முழுவதும் சூறாவளி சுற்றுப்பயணம் செய்துவரும் அவர் பீகார் ஆட்சியை விமர்சனம் செய்துவருகிறார். இது லல்லுவுக்கும் பஸ்வானுக்குமிடையே மோதலை ஏற்படுத்தியிருக்கிறது.

பாட்னா நகரில் நடந்த பொதுக்கூட்டத்தில் பேசிய பஸ்வான் மாட்டுத்தீவன ஊழல் மன்னன் என்று லல்லுவைக் குறிப்பிட்டார். இதனால் கோபமடைந்த லல்லு 1996-97ஆம் ஆண்டு தேவகவுடா மந்திரி சபையில் பஸ்வான் ரயில்வே மந்திரி யாக இருந்த போது வெளிநாட்டிலிருந்து ரூபா எண்ணூறு கோடிக்கு கிரேன் வாங்கியதில் ஏகப்பட்ட பணத்தை ஸ்வாகா செய்துவிட்டார் என்று பதிலடி கொடுத்தார். இதற்குப் பதிலளித் துப் பேசிய பஸ்வான் என்மீது ரூபா எண்ணூறு கோடி ஊழல் புகரை லல்லு கூறியிருக்கிறார் அதை நிரூபித்தால் நான் அரசியலை விட்டு விலகிவிடத் தயார். சி.பி.ஐ விசாரணைக்கு உத்தரவிட்டால் அதைச் சந்திக்கவும் நான் தயார் என்று தெரிவித்தார்.

இன்று பாராளுமன்ற குளிர் காலக் கூட்டத்தொடர் தொடங்க இருக்கும் சூழ்நிலையில் மத்திய மந்திரிகள் லல்லு பஸ்வான் இருவரும் ஒருவர் மீது ஒருவர் ஊழல் புகார்களைக் கூறிவருவது காங்கிரசுக்குச் சிக்கலை ஏற்படுத்தியிருக்கிறது. இது தொடர்பாக பாராளுமன்றத்தில் பிரச்சினையை எழுப்பப்போவதாக பா.ஜனதா அறிவித்திருக்கிறது.

இந்தச் சூழ்நிலையில் தான் லல்லு பஸ்வான் மோதல் குறித்து காங்கிரஸ் கருத்துத் தெரிவித்திருக்கிறது. காங்கிரஸ் கட்சியின் செய்தித் தொடர்பாளர் ஆனந் சர்மா இது குறித்து நிருபர்களிடம் கூறியதாவது மத்திய மந்திரிகள் லல்லு பஸ்வான் மோர்தல் ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசின் நம்பகத்தன்மையைப்பாதிக்காது அவர்கள் இருவரும் பீகார் அரசியலுக்காக மோதிக்கொள்கிறார்கள்.அவர்கள பிரச்சினைகள் குறித்து கூட்டணிக் கட்சிகளுடன் விவாதித்து முடிவெடுக்கப்படும் பிரதமர் மன்மோகன்சிங் இந்தப் பிரச்சினை குறித்து விரைவில் நடவடிக்கை எடுப்பார் ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் ஒருங்கிணைப்புக் கூட்டத்திலும் இந்தப் பிரச்சினை குறித்து விவாதித்து முடிவெடுக்கப்படும் என்றார்.

# இந்திய விஞ்ஞானிக்கு அமெரிக்காவில் விருது

(நியூயோர்க்)

அமெரிக்காவில் டெக்சாஸ் பல்கலைக்கழகத்தில் பேராசியராக இருப்பவர் பிமுபாட்டில். காய்கறி மற்றும் பழம் மேம்பாட்டு மையத்தின் இயக்குநராகவும் இருக்கிறார். இவருக்கு அமெரிக்க வேளாண் மற்றும் உணவு இரசாயனத்துறை 2004ஆம் ஆண்டின் மிகச் சிறந்த இளம் விஞ்ஞானி விருது வழங்கியுள்ளது.

பிலடெல்பியாவில் நடந்த விழாவில் இந்த விருது வழங்கப்பட்டது. உடல் ஆரோக்கியத்துக்கு காய் கறிகள், பழங்களின் பயன்பாடு குறித்த ஆராய்ச்சிக்காக இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.

# ஆந்திராவில் மதிய உணவு உட்கொண்ட பள்ளிக்குழந்தைகள்170 பேருக்குவாந்தி

(கைதராபாத்)

ஆந்திராவில் மதிய உணவு சாப்பிட்ட பள்ளிக்குழந்தைகள் 170 பேர் உடல் நலம் பாதிக்கப்படடுள்ளனர்.

ஆந்திராவின் ஜம்மிக்குண்டா மண்டல் என்ற பகுதியில் இருக்கும் மசினப்பள்ளியில் அரசு ஆரம்பப்பள்ளி உள்ளது. இப்பள்ளியைச் சேர்ந்த குழந்தைகள் 170 பேர் நேற்று முன்தினம் மதிய உணவு சாப்பிட்டனர். அதன் பின்பு மயக்கம், வாந்தி ஏற்பட்டு உடல் நலம் பாதிக்கப்பட்டது. இதையடுத்து அனைவரும் அருகிலுள்ள மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. மதிய உணவுக்கு அளிக்கப்பட்ட சாம்பாரில் பல்லி இறந்து கிடந்ததாக மாணவர்களில் சிலர் குற்றஞ்சாட்டியுள்ளனர். இச்சம்பவம் குறித்து பொலிசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# சாவு அறிவித்தல்



## மயில்வாகனம் சௌந்தரேஸ்வரி

அத்தாய் பூநகரியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவருமாகிய மயில்வாகனம் சௌந்தரேஸ்வரி அவர்கள் 29.11.2004 திங்கட்கிழமை காலை அகாலச் சாவடைந்துள்ளார். அன்னார் தம்பு மயில்வாகனம் அவர்களின் அன்பு மனைவியும், காலம் சென்றவர்களான தியாகராசா தங்கச்சியம்மா அவர்களின் சிரேஷ்ட புத்திரியும், காலம் சென்றவரான குலம், தனேஸ்வரி, ஆகியோரின் சகோதரியும் மஞ்சுளாவின் பெரிய தாயாரும், பாலசிங்கம் (நோர்வே) சௌந்தரராஜன் (பூநகரி குவேந்திரராசா (பூநகரி) விமலராணி (நோர்வே) காலம் சென்ற மகேந்திரராசா, ரவீந்திரராசா (நோர்வே) நேசராணி (பூநகரி), வசந்தராசா (நோர்வே) ஆகியோரின் அன்புத் தாயாரும், சறோஜினிதேவி (நோர்வே), பவானி (பூநகரி), விக்கினேஸ்வரி (பூநகரி), மகாலட்சுமி (நோர்வே), நடேஸ்வரன் (நோர்வே), சத்தியசீலன் (அம்பாள் பந்தல் சேவை பூநகரி) ஆகியோரின் அன்பு மாமியாரும், ரஞ்சனா (நோர்வே), நர்மதா (நோர்வே), சுயானா (நோர்வே), சுதாகரன் (நோர்வே), கோகிலா, சுகித்தா, சசிதரன் (நோர்வே), கௌசிகரன், ராதிகா, ராஜினி, ராஜ்குமார் (நோர்வே), ராஜனா, ரமணன், ஜெனா, துஷ்யந்தினி (நோர்வே), அகிலேஸ்வரன் (நோர்வே), அகிலேஸ்வரி (நோர்வே), ரகுகரன்,விசிகரன், கீர்த்தனா,புவிகரன், பிருத்திகா (நோர்வே) ஆகியோரின் பேத்தியுமாவார், கஜேந்திரகுமார் (பூநகரி) ஆகியோரின் பூட்டியுமாவார் அன்னாரின் தகனக் கிரியைகள் பற்றிய விடயம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(5323)

# தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் போட்டி
# இந்திய அணி 54 ஓட்டங்கள் முன்னிலையில்




தென்னாபிரிக்க-இந்திய அணிகளுக்கிடையில் கொல்கத்தாவில் நடைபெற்று வரும் இறுதி டெஸ்ட் போட்டியின் மூன்றாம் நாள் ஆட்ட நேர முடிவின்போது முதல் இன்னிங்சிற்காக துடுப்பெடுத்தாடும் இந்திய அணி 6 விக்கெட்டுகளை இழந்து 359 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

இதன் மூலம் தென்னாபிரிக்க அணியை விட 54 ஓட்டங்கள் முன்னிலையில் உள்ளது இந்தியா.

துடுப்பாட்டத்தில் வீரேந்திர சேவாக்88 ஓட்டங்களையும், ராவிட் 80 ஓட்டங்களையும், கங்குலி 40 ஓட்டங்களையும், லக்ஸ்மன் 38 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழந்தனர்.

பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட நட்சத்திரத் துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர் 20 ஓட்டங்களை மாத்திரம் பெற்று ஆட்டமிழந்தார்.

ஆட்டமிழக்காது தினேஷ் கார்த்திக் 34



ஓட்டங்களுடனும், இர்பான் பதான் 21 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர்.



பந்து வீச்சில் நிற்றினி, பௌரயின் தலாஇரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

முன்னதாக நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்கா முதலில் துடுப்பெடுத்தாடி 305 ஓட்டங்களைப் பெற்று சகல விக்கெட்டுகளையும் இழந்தது.

துடுப்பாட்டத்தில் ஜாக்கலிஸ்121 ஓட்டங்களையும், ருடெல்ப் 61 ஓட்டங்களையும் அதிக பட்சமாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் சஹீர்கான்,பதான் தலா மூன்று விக்கெட்டுகளையும் ஹர்பஜன் சிங் இரண்டுவிக்கெட்டுகளையும் கைப்பற்றினர். இன்று போட்டியின் நான்காம் நாளாகும்.

## நியூசிலாந்துக்கு எதிரான போட்டியில் உப்புள் சந்தன பங்கேற்பார்




சிறிலங்கா கிரிக்கெட அணியின் சுழல்பந்து வீச்சாளர் உப்புள் சந்தன பயிற்சியில் ஈடுபட்டு வருவதால் அவர் நியூசிலாந்துடனான போட்டிகளில் பங்கேற்பதற்கு பச்சைக்கொடி காட்டியிருப்பதாக அணியின் நிறைவேற்றதிகாரியான துலிப் மெண்டிஸ் தெரிவித்துள்ளார்.

சந்தன அவசர உடல்தகுதிப் பரிசோதனைக்காக சிங்கப்பூர் சென்று திரும்பி வந்தார். சிங்கப்பூர் வைத்தியர்கள் அவரின் உடல்தகுதியில் நல்ல முன்னேற்றம் இருப்பதாக உறுதியளித்துள்ளதுடன் குறிப்பிடத்தக்கமுறையீடுகள் எதுவும் காணப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளனர்.

சிறிலங்கா அண்மையில் பாகிஸ்தான் சென்று வென்று வந்த பின்னர் அவர் நோய்வாய்ப்பட்டிருந்து சிங்கப்பூரில் சிகிச்சை பெற்றார்.

சந்தன 14 டெஸ்ட் போட்டிகளில் பங்கேற்று 35 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியுள்ளார். 132 ஒரு நாள் போட்டிகளில் 137 விக்கெட்டுகளைவீழ்த்தியுள்ளார்.




இந்தியா- ஆசியான் கார்ப்பந்தயம் முதன் முறையாக தற்போது நடந்து வருகிறது. இந்தியாவில் தொடங்கி மியான்மர், தாய்லாந்து உட்பட்ட பல்வேறு நாடுகளைக் கடந்து இந்தோனேசியாவில் முடிவடைகிறது. இந்தப் பந்தயத்தில் கலந்துகொண் டுள்ள கார்கள் நேற்று முன் தினம் தாய்லாந்து நாட்டை அடைந்தன. அங் குள்ளமலைப் பாதை வழியாகக் கார்கள் செல்வதைத்தான் இங்கு காணலாம்.

# அடிலேய்ட் டெஸ்ட் கிரிக்கெட் போட்டி
# நியூசிலாந்து அணிக்குப் படுதோல்வி

அடிலேய்ட்டில் நடைபெற்ற நியூசிலாந்துடனான 2ஆவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டியை 213 ஓட்டங்களால் வென்று அவுஸ்திரேலியா தொடரை 2-0என்ற நிலையில் கைப்பற்றிவிட்டது.

464 என்ற கடினமான வெற்றியிலக்கு நோக்கி நேற்று முன்தினம் ஆடத் தொடங்கிய நியூசிலாந்து ஆட்ட நேர முடிவில் 5



விக்கெட்டுக்களை இழந்து 149 ஓட்டங்களைப் பெற்றது.எனினும் மிகுதி 5



விக்கெட்டுக்களையும்இறுதி நாளான நேற்று 100 ஓட்டங்களுக்கு இழந்து தோல்வியைத்தழுவியது.

தொடரின் நாயகனாக ஜஸ்ரின் லாங்கர் தெரிவு செய்யப்பட்டார்.

அவுஸ்திரேலியா முதல் இன்னிங்சில் 8 விக்கெட் இழப்பிற்கு 575 ஓட்டங்கள் லாங்கர் 215, ஹெய்டன் 70 ஓட்டங்கள், பந்து வீச்சில் விக்டோரி 4,மில்ஸ் 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

நியூசிலாந்து முதல் இன்னிங்சில் 251 ஓட்டங்கள், துடுப்பாட்டத்தில் ஸ்ரீபன் பிளமிங் 83 ஓட்டங்கள். பந்து வீச்சில் மெக்ராத் 4, கிளெஸ்பி 5 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.அவுஸ்திரேலியா இரண்டாவது இன்னிங்சில் இரண்டு விக்கெட் இழப்பிற்கு 139 ஓட்டங்கள். ஹெய்டன் 54 ஓட்டங்களைப் பெற்றார்.

நியூசிலாந்து இரண்டாவது இன்னிங்சில்




250ஓட்டங்களைப் பெற்று சகல விக்கெட்டுகளையும் இழந்தது. பந்து வீச்சில் காஸ்பரோவிக், மெக்ராத், கிளெஸ்பி, ஷேன்வோர்ன்,லீமன் தலா இரண்டு விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.



## விளையாட்டு

# ஸ்கொட்லாந்து கால்பந்து சங்க முகாமையாளராக வோல்டர் ஸ்மித் நியமனம்



ஸ்கொட்லாந்து உதைபந்தாட்ட சங்கத்தின் முகாமையாளராக 56 வயதான வோல்டர் ஸ்மித் நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கான நேர்முகப்பரீட்சை கடந்த 19 ஆம் திகதி நடைபெற்றது. இவரது நியமனம் பெரும் இழுபறி நிலையில் காணப்பட்டாலும் சங்கத்தின் நிறைவேற்றதிகாரிகள் நால்வரும் எடுத்த ஏகமனதான முடிவின்படி அவரின் நியமனம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்நியமனம் தொடர்பாக முன்னாள் சங்கத் தலைவர் பிரவுன் ஸ்மித்தின் நியமனம சரியானதே எனவும் வீர்ங்களையும் நடத்துவதிலும் நிர்வகிப்பதிலும் அவர் திறமையுடன் செயற்படுவார் எனவும் கூறியுள்ளார்.

மிகக் கடினமான சந்தர்ப்பங்களில் கிளஸ்கோல் தொடர் எவர்டர் ஆகியவற்றில் அவரது திறமையை வெளிப்படுத்தினார் என பிரவுன் தெரிவித்தார்.

# சிறிலங்கா கிரிக்கெட் அணி சிறப்பான நிலையில் உள்ளது

## பிரண்டன் குருப்பு

அடுத்த மாதம் நியூசிலாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ள தமது அணி பாகிஸ்தானுடனான போட்டிக்குப் பின்னர் நன்கு பயிற்சி பெற்றுள்ளதாக அணிக்குப் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள முன்னாள் விக்கெட் காப்பளரும் துடுப்பாட்ட வீரருமான பிரண்டன் குருப்பு தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா எதிர்வரும் 16 ஆம் நியூசிலாந்து அணியுடனான முதல் ஒரு நாள் போட்டியில் விளையாடும் இதற்கு முன்னதாக இரண்டு பயிற்சிப் போட்டிகளும் ,இரண்டு டெஸ்ட் போட்டிகளுக்கு முன்பு ஒருபயிற்சி போட்டியும் இடம் பெறும் என தெரிவித்துள்ள குருப்பு இந்தப்பயிற்சி போட்டிகள் தனது அணியின் திறமையை வெளிக் காட்ட உதவும் என்றும் தெரிவித்துள்ளார்.

நியூசிலாந்து அணியுடன் விளையாடுவது இலகுவான காரியமல்ல என்று தெரிவித்த அவர் அதற்கேற்றவாறு சிறிலங்கா அணி நல்ல பயிற்சி பெற்றிருப்பதாகக் கூறியுள்ளார்.

## மாவீரர் வெற்றிக்கிண்ண உதைபந்தாட்டம்

# கரைச்சிப்பிரதேச அணிகளுக்கான தெரிவு அரையிறுதி,இறுதிப்போட்டி நாளை ஆரம்பம்

இடைநிறுத்தி வைக்கப்பட்ட கரைச்சிப் பிரதேசத்திற்கான மாவீரர் வெற்றிக் கிண்ணத்திற்கான உதை பந்தாட்டம் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளது எதிர்வரும் 02.12.2004 வியாழக்கிழமை காலை 8.00 மணிக்கு உதயதாரகை விளையாட்டு மைதானத்தில் நடைபெற இருப்பதால் இச் சுற்றுப் போட்டிக்கு அரைஇறுதிக்கு தெரிவாகியுள்ள கழகங்கள் தங்களைத் தயார் படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்வதுடன் உரியநேரத்திற்கு சமுகம் கொடுக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

முதலாவது அரையிறுதிப்போட்டி

லக்கிஸ்ரார் [illegible]டு கழகம், எதிர் உழவர் ஒன்றிய விளையாட்டுக் கழகம் காலை 8.00 மணிக்கும்

இரண்டாவது அரையிறுதிப்போட்டி

திருநகர் விளையாட்டுக் கழகம், எதிர் சந்திரோதயா விளையாட்டுக்கழகம் காலை 9.30 மணிக்கும் இடம்பெறும்.

மாலை 3.00 மணிக்கு இறுதிப் போட்டி நடைபெறுவதுடன் பிரதேச ரீதியாக தெரிவு செய்யப்பட்ட அணிகளுக்கான போட்டி 04,05ஆம் திகதிகளில் நடைபெறும் என் பதனை கிளி/ மாவட்ட விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் த.ராஜா தெரிவித்துள்ளார்.

(சோ)

# பாகிஸ்தான் வீரர்களுக்கு சம்பள திட்டம் அறிவிப்பு
# கையெழுத்திட ஷொஹைப் அக்தர் மறுப்பு



பாகிஸ்தானில் முன்னிலை கிரிக்கெட் வீரர்கள் 17பேருக்கு மாதச்சம்பளமாக ரூ.75ஆயிரம் முதல் 2 இலட்சம்வரை வழங்கப்படும் என்று பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியம் அறிவித்துள்ளது.

வீரர்களுடன் இதற்கான ஒப்பந்தம் முதன்முதலாக ஞாயிற்றுக்கிழமை கையெழுத்திடப்பட்டது. இருப்பினும் அந்நாட்டின் அதிவேக பந்துவீச்சாளர் ஷொஹைப் அக்தர் இதில் கையெழுத்திட மறுத்துவிட்டார். அவர் சில கேள்விகளை எழுப்பியுள்ளார்.

இது குறித்துப்பின்னர் அறிக்கை வெளியிடப்படும் என்று பி.சி.பி.அறிவித்துள்ளது. அணித்தலைவர் இன்சமாம் உல்ஹக், துணைத் தலைவர் யூசுப் யுகானா, சகல துறை வீரர் அப்துல் ரசாக் மற்றும் அக்தர் ஆகியோர் 'ஏ' பிரிவில் ஒப்பந்தம் செய்ய தேர்ந்தெடுக்கப்பட்டனர். அதன்படி இவர்களுக்கு மாத ஊதியமாக ரூ.2 இலட்சம் கிடைக்கும்.

முதலில் அக்தர் 'பி' பிரிவில் இடம் பெற்றிருந்தார். அவர் சில விடயங்களைக் கிளறியதும் அவருக்கு 'ஏ' பிரிவில் இடம் வழங்கப்பட்டது.

'பி' பிரிவில் ஒப்பந்தம் செய்யப்படும் வீரர்களுக்கு மாத ஊதியமாக ரூ.1.25 இலட்சம் தரப்படும். 'சி' பிரிவினருக்கு 75 ஆயிரம் கிடைக்கும்.



## சிந்தனைக்கு

சிங்களப் பயங்கரவாதமானது எமது தேசிய ஆன்மாவில் விழுத்திய வடுக்கள் என்றுமே மாறப்போவதில்லை.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 01-12-2004
தொலைபேசி / தொலைநகல் 021-2283948,060-2213244
மின் அஞ்சல் Daily@ eezhanatham. com

## ஜே.வி.பியின் காலம்!

திருமலையில் திட்டமிட்ட ரீதியில் தமிழ் மக்களுக்கு எதிரான வன்முறை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் பின்னணியில் ஜே.வி.பி உள்ளதென்பதில் எந்தவித சந்தேகமும் கொள்ளத்தேவையில்லை மாவீரர் நாட்களில் இருந்து முயற்சிக்கப்பட்ட வன்முறை–அதாவது தமிழ் மக்கள் மீதான தாக்குதலை நேற்று முன்தினம் ஜே.வி.பி.ஆரம்பித்ததெனலாம்.

இலங்கையின் அரசியல் வரலாற்றில் ஆட்சி அதிகாரத்திற்காகப் போட்டியிட்ட சிங்களவர்கள் அனைவருமே தமிழ் மக்கள் மீது வன்முை யைக் கட்டவிழ்த்து விடத் தவறவில்லை. இது இதுவரை ஆட்சியிலிருந்த அரசியற்கட்சிகளுக்கும் பொருந்தும், கட்சித்தலைவர்களுக்கும் பொருந்தும்.

இந்த வகையில் தற்போது தனது பங்கிற்கு ஜே.வி.பி. வன்முறையை ஆரம்பித்துள்ளதெனலாம் இவ்வன்முறையில் தற்போதைய அரசாங்கத்திற்கு என்ன பங்கு? ஆயுதப்படையினருக்கு என்ன பங்கு? என்பதை உறுதிபடக் கூற முடியாது விட்டாலும் வன்முறைகள் எப்பொழுதும் ஆயுதப்படைத்தரப்பின் ஒத்துழைப்பின்றியும் அரசாங்கத்தின் ஆசீர்வாதம் இன்றியும் மேற்கொள்ளுதல் என்பது கடினமானதாகும் அவ்வாறு மேற்கொள்ளப்படுமாயின் தவிர்க்க முடியாது சட்டத்தின் பிடியில் சிக்க வேண்டியதாகிவிடும்.

இந்த வகையில் பார்க்கையில் இவ்வன்முறைகளுக்கும் அரசிற்கும் நேரடித்தொடர்பு உண்டோ இல்லையோ அரசின் ஆசீர்வாதம் இல்லாமல் இருக்கமுடியாது. அவ்வாறு இல்லாவிடில் ஊரடங்கு வேளையில் ஆயுதப்படையுடன் சிங்களக் காடையர் கூட்டம் வீதிகளில் நடமாடவோ தமிழர்கள் மீது தாக்குதல் நடத்துவதோ சாத்தியப்படான தொன்றாக இருக்கமாட்டாது.

இதேவேளை திருமலையில் தமிழ் மக்கள் மீது சிங்களக் காடையர் குழு மேற்கொண்டுள்ள தாக்குதலானது. தமிழர்களுக்கு இழப்புக்களையும் சேதங்களையும் விளைவித்தல் என்ற நோக்கத்துடன் மட்டும் சம்பந்தப்பட்டதல்ல தற்பொழுது நிலவும் அமைதியைக்குலைப்பதான நோக்கமும் கொண்டதாகும். அதாவது, யுத்த நிறுத்தத்தை முடிவிற்குக்கொண்டுவரும் நோக்கிலானதாகும்.

இலங்கையைப் பொறுத்து தமிழருக்கு எதிரான வன்முறையை எவ்வாறு ஆளும் கட்சிகள் நடத்தினார்களோ அதேபோன்று இரண்டு பிரதான கட்சிகளும் யுத்தத்தையும் நடத்தியுள்ளன. இரு கட்சிகளுமே இராணுவ ரீதியில் தமிழ் மக்களின் உரிமைக்கான போராட்டத்தை தோற்கடிக்கவே விரும்பின. ஆனால் அவர்களினால் தமது இலக்கை அடைய முடியவில்லை மாறாக நாட்டிற்குப் பாதகமான விளைவுகளே ஏற்பட்டன.

தற்பொழுது வன்முறைக்குக் காரணமாகவுள்ள ஜே.வி.பி.யும் தமிழ்மக்களுக்கு எதிரான யுத்தத்தைத்தானும் ஒரு தடவை நடத்திப் பார்க்க விளைகின்றது. அதாவ்து இராணுவ ரீதியில் இனப்பிரச்சினையைத் தீர்த்துவிட விளைகின்றது. ஆகையினால் தற்பொழுது நிகழும் அமைதியைக் குலைத்து சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை யுத்தம் நோக்கி இழுத்துவர அது முற்பட்டுள்ளது.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் ஆயுதப்படைத்தரப்பில் பலரும் யுத்தம் ஒன்று தேவையற்றது என்றே கூறுகின்றனர்.தாம் யுத்தத்தை விரும்பவில்லை என்றும் கூறுகின்றனர். ஆனால் இவர்கள் அனைவரும் யுத்தத்தை நோக்கி நாடு இழுபட்டுச் செல்வதற்குத் தமது ஆதரவை வழங்குபவர்களாகவே உள்ளனர். அவ்வாறு இல்லாது விடில் சமாதான முயற்சிகளை முறியடிப்பதோடு நாட்டை யுத்தித்திற்குள் விரைந்து இழுத்துச் செல்ல முற்படும் ஜே.வி.பி.யின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த விளைந்திருப்பர்.

ஆனால் அவை எதுவும் நடைபெறாத நிலையில் ஜே.வி.பி. தனது பங்கிற்காக நாட்டில் யுத்தம் ஒன்றை ஆரம்பிப்பது தவிர்க்கமுடியாத தாகிவிடும் ஒவ்வொரு ஆட்சியாளரும் தமது பங்கிற்கு யுத்தம் ஒன்றை நடத்த எத்தனிக்கும்போது அதில் தம்மால் வெற்றி பெற முடியும் என்றே கருதுகின்றனர். அதாவது தமிழ் மக்களை அடக்கி ஒடுக்கிவிட முடியும் என்றே யுத்தத்தை ஆரம்பிக்கின்றனர்.

ஆனால் கடந்தகால அனுபவங்கள் எவையும் அவர்களுக்கு அனுகூலமானவையாக இல்லை சிலவேளை கடந்த கால ஆட்சியாளர்களின் தவறுகளினால் தான் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை அடக்கி ஒடுக்கி விட முடியவில்லை என புதியவர்கள் காரணம் கற்பிக்க விளையலாம். ஆனால் உலகின் எப்பகுதியிலும் தேசிய இன விடுதலைப் போராட்டங்களை இராணுவ ரீதியில் வெற்றி கொள்ளுதல் என்பது சாத்தியமானதாக இருக்கவில்லை என்பதே வரலாறாகும்.

ஆகையினால் ஜே.வி.பி.யின் தற்போதைய செயலானது இலங்கையை மீண்டும் ஒரு யுத்தித்திற்குள்– நெருக்கடிக்குள் இட்டுச் செல்ல முற்படுவதாக மட்டுமே இருக்கும் இதனை ஆட்சியாளர்கள் தடுத்து நிறுத்தாது போனால் தனது ஆட்சிக்காலத்திற்குள் இரண்டாவது தடவையாகவும் யுத்தத்தை தெரிவு செய்தவர் என்ற குற்றச்சாட்டிற்கு சனாதிபதி சந்திரிகா பொறுப்பேற்க வேண்டியவராக இருப்பார்.

# நாடு பிளவுபடுவதைத் தடுக்க வேண்டுமானால் பேச்சுக்களை உடன் ஆரம்பிக்க வேண்டும்

## -தமிழ்க் கூட்டமைப்பு பா.உ. இரா.சம்பந்தன்

நாடு பிளவுபடுவதைத் தடுக்க வேண்டுமானால் சமாதான பேச்சுவார்த்தைகள் உடனடியாக ஆரம்பிக்கப்படல் அவசியம் எனத் தமிழரசுக்கட்சியின் செயலர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

நேற்றுப் பாராளுமன்றத்தில் உரையாற்றிய அவர்

தமிழீழ விடுதலைப்புலிகளின் இடைக்கால தன்னாட்சி அதிகார சபை யோசனையில் ஏதாவது முரண்பாடு இருக்குமானால் அதனைப் பேச்சுவார்த்தை மேசையில் தீர்க்கலாம் எனத் தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் யோசனையானது இன்னும் பண்டாரநாயக்க செல்வநாயகம் மற்றும் டட்லி செல்வநாயகம் இணக்கப்பாடுகளுக்கு அப்பால் செல்லவில்லை என்பதை அவர் சுட்டிக் காட்டினார்.

இந்த நிலையில் உரையாற்றி ஜாதிக ஹெல உறுமயவின் பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலியே ரத்தன இலங்கையின் வரலாற்றில் தமிழ் இராஜ்சியம் இருந்ததாக சாட்சியங்கள் இல்லையெனவும் அவ்வாறு இருக்குமாக இருந்தால் அதனை பாராளுமன்ற தெரிவுக்குழுவின் முன்னால் நிருபிக்க முடியும் என்றும் தெரிவித்தார்.

நாட்டிற்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏற்படுமானால் அதனைக் கட்டுப்படுத்த நிறைவேற்று சனாதிபதிக்கு அதிகாரம் இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். (32)

# போர்த்துக்கீசர்களின் வழியிலேயே இன்றும் வெள்ளையர்கள் முயல்கின்றனர்

## ஜே.வி.பி பிரச்சார செயலர் விமல் வீரவன்ச

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகள் முன்வைத்துள்ள இடைக்கால நிர்வாக யோசனையின் பின்னணியில் வெளிநாட்டு சர்வாதிகார அழுத்தம் காணப்படுவதாக ஜே.வி.பியின் பிரச்சார செயலர் விமல் விரவன்ச கூறியுள்ளார்.

கண்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற நாட்டுப்பற்றுள்ள தேசிய அமைப்பின் மலையக மகாசம்மேளனக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே வீரவன்ச இவ்வாறு கூறியுள்ளார்.

யுத்தம் செய்து மலையகத்தைக் கைப்பற்ற முடியாது பொருளாதாரத்தைத்தான் சிதைக்க வேண்டும் எனப் போர்த்துககீசர்கள் பொருளாதாரத்தடையை விதித்தார்கள். இதன் மூலம் எமது மூதாதையினர் பசியினால் மண்டி இடுவார்கள் என அவர்கள் அப்போது நினைத்தார்கள். ஆனால் இப்போதும் வெள்ளையர்கள் அதனையே செய்ய முற்படுகிறார்கள்.

நானூறு மில்லியன் டொலர்கள் வழங்குகின்றோம். இடைக்கால நிர்வாகசபை அடிப்படையில் பேச்சுவார்த்தையை ஆரம்பியுங்கள் என அழுத்தம் கொடுக்கின்றனர் எனவும் விமல் வீரவன்ச மேலும் கூறியுள்ளார்

# கூட்டமைப்புத் தேர்தல் வெற்றிக்கு எதிராக ஈ.பி.டி.பி தாக்கல் செய்த மனு தள்ளுபடி

கடந்த பொதுத் தேர்தலில் திருகோணமலை மாவட்டத்தில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு வெற்றி பெற்றதை எதிர்த்துத் தொடரப்பட்ட வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது.

ஈ.பி.டி.பி.யினர் தாக்கல் செய்த இம் மனுவை மேன்முறையீட்டு நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. இந்த மனுவை தள்ளுபடி செய்த நீதிமன்றம் செலவுத் தொகையாக 35ஆயிரம் ரூபாவை தமிழ்த் தேசிய கூட்டமைப்பிற்கு செலுத்துமாறும் உத்தரவில் குறிப்பிட்டுள்ளது. மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் ஐ.எம் இமாம் இந்தத் தீர்ப்பை வழங்கினார். கடந்த பொதுத் தேர்தலில் தமிழரசுக் கட்சிச் சின்னத்தில் போட்டியிட்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பு திருகோணமலை மாவட்டத்தில் போனஸ் உட்பட 2 ஆசனங்களைக் கைப்பற்றியது. தேர்தல் வாக்களிப்பு நேர்மையான முறையில் இடம்பெறவில்லை என்றும் தேர்தல் முடிவுகளை ஏற்றுக் கொள்ள முடியாது என்று ஈ.பி.டி.பி. தலைமை வேட்பாளரான சி.விக்னேஸ்வரன் இது தொடர்பான ஆட்சேபனை மனுவை தாக்கல் செய்தார். அந்த மனுவில் தேர்தல் முடிவுகளைச் செல்லு படியற்றதென அறிவிக்க வேண்டும் என்றும் கோரியிருந்தார். சட்டமா அதிபர்,தேர்தல் ஆணையாளர், தேர்தலில் போட்டியிட்ட எம்.பிக்களான கூட்டமைப்பு உறுப் பினர்கள் உட்பட வேட்பாளர்கள் 7 பேர் என 100 பேர் வரையிலானோர் இந்த மனுவில் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டிருந்தனர். இந்த மனு மீதான விசாரணைகளின் முடிவில் நேற்று முன்தினம் நீதியரசர் இமாம் தீர்ப்பளித்தார். வழக்கைத் தள்ளுபடி செய்த அவர், 35 ஆயிரம் ரூபா அபராதச் செலவுத் தொகையை தமிழ்க் கூட்டமைப்புக்கு ஈ.பி.டி.பி. செலுத்த வேண்டும் என்றும் உத்தரவிட்டார். (32)

## வாகனங்களுக்கு கறுப்புக்கண்ணாடி பொருத்துவதற்குத் தடைவிதிப்பு

வாகன்ங்களுக்கு கறுப்பு கண்ணாடி பொருத்தப்படுவதற்கு எதிராக இன்று முதல் கடும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக சிறிலங்காவில் அறிவிக்கப்பட்டுள்ளது. இதனைப் பயன்படுத்தி சட்டவிரோத நடவடிக்கைகள் இடம்பெறுவதைத் தடுக்கவே இந்த தடை நடைமுறைக்கு கொண்டு வரப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் இந்தத் தடையில் இருந்து விசேட உறுப்பினர்களுக்கு விலக்களிக்கப்பட்டுள்ளது. (32)

# ஜோர்தானில் இலங்கைப் பெண்கள் 140 பேர் நிர்க்கதி நிலையில்

ஜோர்தானில் இலங்கையின் சுமார் 140 பெண்கள் நிர்க்கதி நிலைக்கு உள்ளாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்களுக்கு உரிய தொழில்கள் இன்றி முகாம் ஒன்றில் உரிய உணவுகள் இன்றி இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்களை நாட்டுக்கு திருப்பியழைக்கவோ அல்லது மீண்டும் வேலைவாய்ப்பைப் பெற்றுக்கொடுக்கவோ இலங்கை அரசாங்கம் முனைப்பு எதனையும் மேற்கொள்ளவில்லை எனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. வெளிநாடுகளில் பணியாற்றும் பெண்களிடம் இருந்து ஆண்டு ஒன்றுக்கு 13 ஆயிரத்து 645 கோடி ரூபா இலங்கைக்கு வருகின்ற போதும் பணிப்பெண்கள் தொடர்பாக அரசாங்கம் எவ்வித நடவடிக்கையையும் மேற்கொள்ளாமை விமர்சனத்துக்கு உள்ளாகியுள்ளது. (32)

## நீதிபதி கொலை வழக்கு விசேட நீதிமன்றில் நடைபெறும்

மேல் நீதிமன்ற நீதிபதி சரத் அமுனுகம கொலை வழக்கினை விசேட நீதிமன்றத்தில் நடத்துவதற்கு சட்டமா அதிபர் தீர்மானித்துள்ளார். இந்தக் கொலையானது கொடுமையான கொலை எனக் கருதியே இந்த வழக்கினை விசேட நீதிமன்றத்தில் நடத்த சட்டமா அதிபர் தீர்மானித்துள்ளார் இதன். அடிப்படையில் குறிப்பிட்ட வழக்கு யூரிகள் அற்ற நிலையில் மூன்று நீதிபதிகளின் முன்னிலையில் நடைபெறும்

# கண்காணிப்புக்குழு தலைவருடனான சந்திப்பிற்கு ஏற்பாடு செய்து தருக!

## திருமலை மாவட்ட அரசியல்துறைப்பொறுப்பாளர் கோரிக்கை

(அலுவலக செய்தியாளர்)


திருமலையில் ஏற்பட்டுள்ள நிலை தொடர்பாக பேசுவதற்கு யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் அவர்களுடன் சந்திப்பொன்றை ஏற்படுத்தித் தருமாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் திருமலை மாவமட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் எஸ்.எழிலன் கேட்டுள்ளார்.

நேற்று மாலை மாவட்ட கண்காணிப்பாளரூடாக கண்காணிப்புக் குழுத் தலைவரிடம் மேற்படி வேண்டுகோளை அவர் விடுத்துள்ளார். சிங்களக் காடையர்கும்பலும் ஜே.வி.பியினரும் படையினருடன் இணைந்து தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளுகின்ற இத்தகைய வன்முறைகளை ஒருபோதும் அனுமதிக்கமாட்டோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதே வேளை திருக்கடலூர் பகுதியில் வீடு எரிக்கப்பட்ட சம்பவம் மற்றும் பிற தாக்குதல்களினால் இடம் பெயர்ந்து ஆலயங்களிலும், பாடசாலைகளிலும் உறவினர் வீடுகளிலும் தங்கியிருக்கின்றவர்களுக்கான உதவிகளை செய்யுமாறும் மாவட்ட அரசியல் துறை பொறுப்பாளர் எஸ்.எழிலன் கிராம சேவகர்களிடமும், பிரதேச செயலாளர்களிடமும் அரச சார் பற்ற நிறுவனங்களிடமும் கேட்டுள்ளார். எழிலனின் மேற்படி கோரிக்கைக்கு தம்மால் இயன்ற உதவிகளை வழங்குவதாகவும் அவர்கள் உதவியளித்துள்ளனர்.

இது இவ்வாறிருக்க நேற்று திருமலையில் நிலமைகள் ஓரளவு சுமுகமாக இருந்த போதும் மக்கள் வ்டுகளை விட்டு வெளியில் செல்வதைக் காணமுடியவில்லை பாடசாலைகள், அரச, அரசார்பற்ற நிறுவனங்கள் எவையும் நேற்றும் இயங்கவில்லை. அங்காங்கே காலையில் சில அலுவலகங்கள் திறந்திருந்தபோதும் அவையாவும் உடனடியாகவே மூடப்பட்டன. மக்கள மத்தியில் பதற்றமான சூழல் நிலவி வருகிறது. எனவும் அப்பகுதயில் இருந்துவரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை நேற்றுக் காலை 9.00 மணிக்கு திருமலை பொதுச் சந்தையில் பொருட்கள் வேண்டிய தமிழர்கள் மீது சிங்களக்காடையர்கள் தாக்குதல் நடத்தி உள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (லோ)



வடமராட்சி எல்லங்குளம் மாவீரர் துயிலுமில்லத்தில் மாவீ தினத்தன்று யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பா சி.இளம்பரிதி ஈகச்சுடரேற்றுவதைப் படத்தில் காணலா

# கிளி.உணவகமொன்றில் உணவருந்திய 9 பேர் மருத்துவமனையில் அனுமதி

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி நகரில் உள்ள தனியார் உணவகம் ஒன்றில் உணவருந்திய ஒன்பதுக்கும் அதிகமானவர்கள் உணவு நஞ்சாகியதால் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

நேற்றுமுன்தினம் இரவு கிளி நகரின் உணவகம் ஒன்றில் உணவு உட்கொண்டவர்களே இவ்வாறு கிளி. பொன்னம்பலம் மருத்துவமனையில் சிகிச்சை பெறுகின்றனர். இவர்கள் குறித்த உணவகத்தில் இரவு உணவை இறால் கறியுடன் உட்கொண்டதாகவும் அதன் பின்னர் வயிற்றுவலி மற்றும் வாந்தி என்பன ஏற்பட்டதுடன் உடல் பலவீனம் அடைந்து மோசமான நிலையை அடைந்து கொண்டிருந்ததினால் தாம் பொறுக்க முடியாத நிலையில் வைத்தியசாலைக்கு வந்ததாகவும் தெரிவித்தனர்.

இதனையடுத்து தமிழீழ சுகாதார சேவையினர் சம்பந்தப்பட்ட உணவகம் மீது நடவடிக்கை மேற்கொண்டு உணவகத்தை மூடியுள்ளனர். அத்துடன் கிளிநொச்சியில் உள்ள உணவகங்கள் பலவற்றிலும் தமிழீழ சுகாதார சேவையினரும் கிளி. சுகாதார வைத்திய பிரிவினரும் இணைந்து ஆய்வுகளை மேற்கொண்டதுடன் சுகாதாரம் சம்பந்தமான அறிவுறுத்தல்களையும் வழங்கியுள்ளனர்.

இதேவேளை சுகாதாரக் குறைபாடு நிலவிய உணவகங்கள் மீது நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக தமிழீழ சுகாதார சேவையினர் தெரிவித்தனர். இதேவேளை உணவு நஞ்சாகியதால் பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்களையும் சென்று பார்வையிட்டிருப்பதாகவும் அவர்கள மேலும் தெரிவித்தனர். (லோ,தீ)

# மட்டு.பிரபல வெதுப்பகம் மீது இனந்தெரியாதோர் கைக்குண்டுவீச்சு

மட்டக்களப்பு நகரிலுள்ள பிரபல வெதுப்பகமொன்றின் மீது நேற்றிரவு 8.10 மணியளவில் இனந் தெரியாத நபர்களினால் கைக்குண்டு வீசப்பட்டுள்ளது.

தாண்டவன்வெளி சந்தியிலுள்ள 'ஷன்சைன்' வெதுப்பகம் மீதே இந்தக் கைக்குண்டு வீசப்பட்டுள்ளது. இது வெதுப்பகம் உள்ளே விழுந்த போதிலும் அது வெடிக்கவில்லை.

இந்த சம்பவத்தின்போது வெதுப்பகப் பணியாள்களும் வாடிகையாளர்களும் என 10 இற்கும் மேற்பட்டவர்கள் அங்கு காணப்பட்டுள்ளார்கள்.

இந்தச் சம்பவம் தொடர்பாக வெதுப்பக உரிமையாளர் ரி.நந்தகுமார் மட்டக்களப்புப் பொலிசாருக்கு அறிவித்ததையடுத்து குறிப்பிட்ட கைக்குண்டை பொலிசார் மீட்டுள்ளனர்.

பொலிஸ் நிலையத்திலிருந்து 300 மீற்றர் தொலைவிலும் தாண்டவன் வெளிச்சந்தி வீதிச் சோதனையிலிருந்து 50 மீற்றர் தொலைவிலும் இந்த வெதுப்பகம் அமைந்துள்ளது. விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து கருணா வெளியேற்றத்தின் பின்பு மட்டக்களப்பு நகரில் தூண்டப்பட்ட வன்முறைகளின்போது இந்த வெதுப்பகத்திற்கு சில தீய சக்திகளினால் தீ வைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதையும், ஓரிரு மாதங்களுக்கு முன்பு பிரபல வர்த்தக நிறுவனமான தயா ஸ்ரோர்ஸ்சிற்கும் இப்படி கைக்குண்டு வீசப்பட்டதையும் மட்டக்களப்பு வர்த்தகர் சமூகம் சுட்டிக் காட்டுகின்றது.

### திருமலை..

கிழக்கு சிங்கள பௌத்த சங்க செயலரும் இதில் பங்கேற்றனர். இதன் போது நகரில் சமாதானக் குழுக்களை மீள் அமைப்பது தொடர்பாக அனைத்துத்தரப்புகளும் இணக்கம் தெரிவித்தன இதன அடிப்படையில் தற்சமயம் திருகோணமலை பொலிஸ் நிலையத்தில் கூட்டம் ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் இராணுவத் தளபதி சாந்தகொட்டேகொட, வடக்கு கிழக்குப் பிராந்திய இராணுவத்தளபதி கந்துலமல்லவராச்சி மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் உபாலிகேவகே மற்றும் சமயத்தலைவர்கள், சமாதானக்குழுக்களின் தலைவர்களும் கலந்துகொண்டுள்ளனர்.

### பிரபாகரன்..

அவசியம் மத்திய அரசாங்கம் சக்திமிக்கதாக இருக்கும் போதே அதிகாரப்பரவாக்கலாக்கத்துக்கு உரிய முனைப்புகளை மேற்கொள்ள முடியும் எனவே சனாதிபதி முறை ஒழிக்கப்படுவதற்கு தமது கட்சி எதிர்ப்பு தெரிவிப்பதாகத் தெரிவித்த அவர், எனினும்

சனாதிபதியானவரின் பதவி நீதிமன்றம் மற்றும் பாராளுமன்றத்திற்கு பதில் சொல்லும் வகையில் மாற்றியமைக்க அரசாங்கம் முனைப்பு மேற்கொள்ளுமாக இருந்தால் அதனைத் தமது கட்சி வரவேற்கும் எனவும் அவர் தெரிவித்தார். (32)

### திருகோணமலையில்.

கண்டுபிடிக்கப்பட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை நேற்று முன்தினம் இரவு திருக்கடலூர் பகுதியில் மூன்று வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. இதன்போது இப்பகுதியில் உள்ள வீடொன்றின் மீது கைக்குண்டொன்று வீசப்பட்டதில் ஒருவர் காயங்களுக்குள்ளாகி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதனையடுத்து கிருஷ்ணாபுரி மற்றும் திருக்கடலூர் கிராமத்தைச் சேர்ந்த எழுபத்தைந்து குடும்பங்கள் திருக்கடலூர் மீனவர் சங்கத்தில் தஞ்சமடைந்துள்ளன.

### படு பயங்கர..

டொன்புறூவ் ஹொவ்டே மேலும் கூறியுள்ளார். புலிகளின் தலைவர் பிரபாகரனின் உரையை தனது கருத்துக்கு ஆதாரமாகச் சுட்டிக் காட்டியுள்ளடொன்புறூவ் ஹொவ்டே யுத்த நிறுத்த உடன்படிக்கைக்கு ஏற்பட்டுள்ள அழுத்தத்தையே பிரபாகரனின் உரையின் உள்ளடக்கம் வெளிப்படுத்தியுள்ளது என்றும், சமாதானப் பேச்சுக்கள் நடைபெறாத சூழ்நிலை யுத்த நிறுத்த உடன்படிக்கையை உருக்குலைத்துவிடும் என்பதை பிரபாகரன் மறைமுகமாகக் கூறியுள்ளார் என்றும் கண்காணிப்புக் குழுத் தலைவர் தெரிவித்துள்ளார். (32)

# பாராளுமன்றத்திற்கு அரு நடமாடியதாக மூவர் கைத

பாராளுமன்றத்தின் அயலில் சந்தேகத்துக்கு இடமான முறை நடமாடியதாகக்கூறி தமிழ் பெண் ஒருவரும் ஏனைய இருவரும் இ கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் கைது செய்யப்பட்ட பாராளுமன்றத்துக்கு அருகில் உள்ள வீடொன்றில் வீட்டுப்ப பெண்ணாகப் பணியாற்றி வருவதாகப் பொலிசார். தெரிவித்துள்ள இதேவேளை கைது செய்யப்பட்ட ஏனைய இருவரும் எதற்காகப் பாரா மன்ற பிரதேசத்தில் நடமாடினார்கள் என்பது தொடர்பாகவும் விசாரனை கள் இடம்பெற்றுவருவதாக பொலிசார் தெரிவித்துள்ளனர். (3

# மட்டக்களப்பில் துப்பாக்கியுடன் இளைஞர் ஒருவர் கைது

மட்டக்களப்பு - வாழைச்சேனை வீதி மாவடிவேம்பில் நேற்று முன்தினமிரவு 23 வயது இளைஞரொருவர் ரி-56 ரக துப்பாக்கியுடன் சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

வீதிக் கண்காணிப்பில் ஈடுபட்டிருந்த சிறிலங்கா இராணுவத்தினர் இவரைக் கைது செய்து ஏறாவூர் பொலிசில் ஒப்படைத்துள்ளனர். ரி-56 ரக துப்பாக்கி அதற்கான மகசின் மற்றும் 30 ரவைகள் இவரிடமிருந்து கைப்பற்றப் டதாக தெரிவிக்கப்படுகின்றது. ( கொட்டான்சேனையைச் சே சசிக்குமார் என அழைக்கப் சரசகாந்தன் ஜனிஸ்டன் என் இ இளைஞர் நேற்று மாலை மட் களப்பு மாவட்ட நீதிமன்றத் மேலதிக நீதிபதி எம்.எச்.எம்.அ முன்னிலையில் ஆஜர்படுத்தப் டார். எதிர்வரும் 14ஆம் திகதி வ விளக்கமறியலில் வைக்கும நீதிபதி உத்தரவிட்டார்.

### குருநகர்..

அத்துடன் பொலிசாரும், இராணுவத்தினரும் இணைந்து குருநகரில் உள்ள வீடுகளுள் புகுந்து சோதனைகளை மேற்கொண்டுள்ளனர். இதன் போது 20 இற்கும் மேற்பட்ட வாள் உட்படப் பல்வேறு கூரிய ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவிக்கின்றனர். (33,27)

### இன்று


மாவட்ட மேலதிக அரச அ நா.வேதநாயகம் வேண்டிய துடன். குடியிருப்புகளிற்கு மையாக அச்சுறுத்தலாக அ துள்ள பாரிய மரங்களின் களை வெட்டிப் பாதுகாப் மேற்கொள்ளும் வண்ணம் டுகை விடுத்துள்ளார். (சே

எயிட்ஸ் என்னும் கொடிய உயிர்க்கொல்லி நோயிலிருந்து எம்மைப் பாதுகாப்போம்.

ஒருவனுக்கு ஒருத்தி - ஒருத்திக்கு ஒருவன் என்னும் கொள்கையுடன் வாழ்ந்து எயிட்சிலிருந்து பாதுகாப்போம்.

(சி-10838) தமிழீழ சுகாதார சேவைகள்

# சாவு அறிவித்தல்



வீரகத்தி சிவானந்தம்
(பூசாரி ஆனந்தம்)

பருத்தித்துறை புலோலியைப் பிறப்பிடமாகவும், கிளிநொச் இராமநாதபுரம், மாவடி வீதியை வசிப்பிடமாகவும், மாவடி அம்ம ஆலய முன்னாள் பூசகரும், பூசாரி ஆனந்தம் என செல்லமா அழைக்கப்படுபவருமாகிய வீரகத்தி சிவானந்தம் அவர்கள் 30.11.2004 அன்று காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்ற வர்களான வீரகத்தி லக்சுமிப்பிள்ளையின் அன்பு மகனும், வள்ளியம்மையின் பாசமிகு கணவரும், பவானி, விவேகானந்தன் தயாழினி (கிராமிய சுகாதார தரிசிப்பாளர்), தர்சினி, கேதீசன் நிலோஜினி (இராமநாதபுரம் மகாவித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், மகாதேவன் (மலேரியா தடை இயக்கம்) அவர் ளின் பாசமிகு மாமனாரும், நர்மியா, டனுசி, டனோ ஆகியோரின் பாசமிகு பேரனும் கமலநாதன், சிவசோதிமலர், போதிநாதன் ஆ யோரின் சிறிய தந்தையுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைக 01.12.2004 பிற்பகல் 2.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மம்மில் இந்து மயானத் திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவி னர், நண்பர்கள், அயலவர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல.598 மாவடி அம்மன்வீதி,
இராமநாதபுரம்,
கிளிநொச்சி.

(4941)

தகவல்
குடும்பத்தினர்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 01 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.